பக்கங்கள்: 12
விலை : 30/-
# காலைக்கதிர்
Kalaikkathir
விடியல் 04 வள்ளுவர் ஆண்டு 2051 ஆடி 24 ஞாயிற்றுக்கிழமை 09.08.2020 கதிர் 273

### இது ரகசியம் அல்ல!

தமிழர் தரப்பில் இப்போது ஒற்றுமை குறித்துத்தான் பலரும் சிந்திக்கின்றனர்.

அதுவும் 'தமிழ்த் தேசியம்' பேசும் தரப்புகள் ஒன்றிணைந்து செயற்பட வேண்டும் என்பதுதான் பலரினமும் ஒரே எதிர்பார்ப்பாக உள்ளது. பக்கம்02

# விக்கி போல் கஜனும் கூட்டமைப்புடன் சேர்ந்து பயணிக்க முன்வர வேண்டும்

## செல்வம் அழைப்பு; தமிழரசின் தேசியப் பட்டியல் விவகாரத்துக்கு பேச்சு மூலம் தான் தீர்வுகாண வேண்டும் எனவும் வலியுறுத்து



மன்னார், ஓக. 09

தமிழ்த் தேசியக் கூட்டமைப்புடன் இணைந்து செயற்படவுள்ளார் என்று தமிழ் மக்கள் தேசியக் கூட்டணியின் தலைவர் சி.வி.விக்னேஸ்வரன் அறிவித்துள்ளார். அவரின் கருத்து வரவேற்கத்தக்கது. அதே போல் தமிழ்த் தேசிய மக்கள் முன்னணியின் தலைவர் கஜேந்திரகுமார் பொன்னம்பலமும் கூட்டமைப்புடன் இணைந்து செயற்பட வேண்டும்.

– இவ்வாறு தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் பங்காளிக் பக்கம் 03

# மாவையை எம்.பியாக்கும் எத்தனமாக கூடுகின்றது யாழ். மாவட்டத் தமிழரசு!

## சி.வீ.கே., கனகசபாபதி திருமலை சென்று சம்பந்தனிடம் நேரடியாக வலியுறுத்தினர்

யாழ்ப்பாணம், ஓகஸ்ட் 09

பொதுத் தேர்தலில் யாழ்.மாவட்டத்தில் போட்டியிட்டுத் தோல்வியடைந்த இலங்கைத் தமிழரசுக் கட்சியின் தலைவர் மாவை சேனாதிராசாவை தமிழரசுக் கட்சியின் தேசியப் பட்டியல் இடத்துக்கு நாடாளுமன்ற உறுப்பினராக நியமிக்கும்படி கோருவதற்கான தீர்மானம் ஒன்றை எடுக்கும் நோக்கத்துடன் இலங்கைத் தமிழரசுக் கட்சியின் யாழ்.மாவட்டக் கிளை இன்று அவசர அவசரமாகக் கூடுகின்றது.

அதற்கு முன்நடவடிக்கையாக யாழ்.மாவட்டக் கிளையின் தலைவரும், கட்சியின் பெருளாளருமான கனகசபாபதி, தமிழரசுக் கட்சியின் சிரேஷ் துணைத்தலைவரும், வடக்கு மாகாண சபையின் அவைத் தலைவருமான சி.வீ.கே.சிவஞானம் ஆகியோர் நேற்றுக் காலை திருகோணமலைக்கு விரைந்து கூட்டமைப்பின் தலைவர் இரா.சம்பந்தனைச் சந்தித்து, தேசியப் பட்டியல் எம்.பி. இடத்துக்கு மாவை சேனாதிராசாவை நியமிக்குமாறு வலியுறுத்தினர். பக்கம் 02

## நாமலும் அமைச்சர்



கொழும்பு, ஓக. 09

புதிய அரசின் அமைச்சரவை அந்தஸ்துள்ள அமைச்சர்களின் எண்ணிக்கை 26 எனவும் 40 பக்கம் 02

## கட்சித் தலைவர், செயலாளர் குறித்து பொதுக் குழுவே கூடி முடிவெடுக்கும்!

### சுமந்திரனின் கருத்துக்கு மாவை பதில்

யாழ்ப்பாணம்,ஓக.09

தேசியப் பட்டியல் நியமனம் தொடர்பில் தமிழரசுக் கட்சி உயர்மட்டக் குழுவும் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் உயர்மட்டக் குழுவும் தனித்தனியே ஆராய்ந்து கூட்டாக முடிவை அறிவிக்கவுள்ளன. தமிழரசுக் கட்சியின் தலைவர், பொதுச் செயலாளர் மற்றும் ஏனைய பதவிப் பொறுப்புக்கள் தொடர்பில் தமிழரசுக் கட்சியின் மாநாடும், பொதுக் குழுவுமே கட்சி யாப்பின்படி தீர்மானங்களை எடுக்கவல்லவையாகும். பொதுவெளியில் பத்திரிகையாளர் மாநாட்டில் மேற்குறித்த பதவிப் பொறுப்புக்கள் தீர்மானிக்கப்படுவதில்லை என்பதனைத் தெரிவித்துக்கொள்கின்றோம்.

– இவ்வாறு இலங்கைத் தமிழரசுக் கட்சியின் தலைவர் மாவை. சோ.சேனாதிராஜா தெரிவித்தார்.

அவர் நேற்று விடுத்துள்ள பக்கம் 02

## சசிகலா வீட்டுக்கு சென்ற அங்கஜன், சிவாஜி, அனந்தி



கொழும்பு, ஓக. 09

இலங்கை தமிழரசுக் கட்சியின் யாழ். மாவட்ட வேட்பாளர் சசிகலா ரவிராஜின் வீட்டுக்கு யாழ்ப்பாணத்தைச் சேர்ந்த அரசியல் பிர பக்கம் 02

## சுமந்திரன் செயற்பட்டவிதம் ஜனநாயகத்துக்கு விரோதம்!

### அனந்தி குற்றச்சாட்டு

யாழ்ப்பாணம், ஓக. 09

சசிகலாவின் விருப்பு வாக்கெண்ணும் விடயத்தில் சுமந்திரன் செயற்பட்டவிதம் ஜனநாயகத்துக்கு விரோதமானது என ஈழத்தமிழர் சுயாட்சி கழகத்தின்செயலாளர்நாயகம்அனந்தி சசிதரன் தெரிவித்துள்ளார்.

யாழ்ப்பாணத்தில் நேற்று நடந்த ஊடக சந்திப்பில் கலந்து கொண்ட போதே அவர் இவ்வாறு கூறினார்.

அவர் மேலும் தெரிவிக்கையில், பக்கம் 02

## வன்முறைகள் நடக்கவில்லை

கொழும்பு, ஓக. 09

நாடாளுமன்றத் தேர்தலுக்குப் பின்னர் நாட்டில் எதுவித வன்முறைச் சம்பவங்களும் இடம்பெறவில்லை என்பதுடன் சுமுகமான நிலை தொடர்வதாகவும் பொலிஸார் தெரிவித்துள்ளனர்.

தேர்தல் நடவடிக்கைகளுக்குப் பொறுப்பான பக்கம் 02

## சசிகலாவுக்கு நீதி கோரி இரவிரவாக போராட்டம்

யாழ்ப்பாணம், ஓக. 09

சசிகலா ரவிராஜுக்கு தேசியப் பட்டியல் ஆசனம் வழங்க வேண்டுமென வலியுறுத்தி, நேற்று இரவும் பெண்ணொருவர் போராட்டத்தில் ஈடுபட்டார்.

சாவகச்சேரியில் உள்ள ரவிராஜின் சிலைக்கு முன்பாக நேற்றுக் காலையில் இருந்து சிலர் போராட்டத்தில் ஈடுபட்டு வருகின்றனர். இதன் தொடர்ச்சியாக, நேற்று இரவும் பெண்ணொருவர் போராட்டத்தில் ஈடுபட்டார்.

## இனி இது...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

இது தொடர்பில் ஏற்கனவே கூட்டமைப்பின் சார்பில் சுமந்திரனும், மறுபக்கத்தில் தமிழ் மக்கள் தேசியக் கூட்டணி சார்பில் அதன் ஒரேயொரு எம்.பியான நீதியரசர் சி.வீ.விக்னேஸ்வரனும் விடுத்த அறிவிப்புகள் பலரின் மனதிலும் திருப்தியை ஏற்படுத்தின.

ஒன்றிணைந்து செயற்பட வாருங்கள் என்று அழைப்பை விடுத்த போது சுமந்திரன் மிகக் கவனமாகத்தான் வார்த்தைகளைப் பிரயோகித்தார்.

*“நாடாளுமன்றத்தில் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு 10 பேராகவே அமரப் போகின்றது. யாழ்ப்பாணத்தில் இருந்து விக்னேஸ்வரன், கஜேந்திரகுமார் மற்றும் கஜேந்திரகுமாருடன் இன்னொருவர் நாடாளுமன்றம் வரவுள்ளனர். அவர்கள் எங்களோடு இணைந்து அல்லது நாங்கள் அவர்களோடு இணைந்து செயற்பட வேண்டும் என்று வேண்டுகோள் விடுக்கின்றேன்.”* – என்றுதான் சுமந்திரன் கூறியிருந்தார்.

இந்த அழைப்புக்கு பொறுப்புடனும், சாதகமாகவும் பதிலளித்திருந்தார் விக்னேஸ்வரன்.

கஜேந்திரகுமார் தரப்பின் பதில் என்ன?

பலரும் அதை அரிய ஆவலாக இருப்பார்.

இப்பத்தியில் நான் முன்னர் கூறிய 24 கரட் கதை பாணிதான். 'நாங்கள் மட்டும்தான் சொக்கத் தங்கம். ஓரிஜினல் பவுண். மற்றவை எல்லாம் கலப்புத்தான்' என்ற பாணியிலேயே அகில இலங்கைத் தமிழ் காங்கிரஸின் தலைவர் கஜேந்திரகுமாரின் பதில் அமைந்திருக்கின்றது.

தொலைக்காட்சி ஒன்றுக்குப் பேட்டியளித்துள்ள அவர், நாங்கள் கூட்டமைப்புடனோ, நீதியரசர் விக்னேஸ்வரனோடோ இணைந்து செயற்படத் தயாரில்லை. அவர்களுக்கு விருப்பம் என்றால் எங்கள் பின்னால் வரட்டும்” – என்ற சாரப்பட காட்டமாகப் பதிலளித்திருக்கின்றார்.

கையில் 'காலைக்கதிர்' பத்திரிகையுடன் தான் பேட்டிக்குச் சென்றார் கஜேந்திரகுமார்.

அதில் நீதியரசர் விக்னேஸ்வரன் தொடர்பில் வெளியான ஒரு செய்தியைக் காட்டி, அவரை வாங்குவாங்கென்று வாங்கினார் எனத் தகவல்.

*“நாடாளுமன்றத்தில் கூட்டமைப்புடன் சேர்ந்து செயற்படத் தயார் என்று தேர்தலுக்கு முந்தியே அறிவித்து விட்டார் விக்னேஸ்வரன். அப்படி என்றால் கூட்டமைப்புடன் சேர்ந்து தேர்தலில் நிற்பது தானே. வெளியில் வந்து தேர்தலில் நின்று எங்கள் வாக்குகளை சிதறடிப்பதுதான் அவரின் நோக்கம்”* என்றும் கரித்துக் கொட்டியிருக்கின்றார் கஜேந்திரகுமார்.

போகின்ற போக்கைப் பார்த்தால் கஜேந்திரகுமார் அணி நாடாளுமன்றத்திலும் அரசியல் செயற்பாட்டிலும், ஏனைய தமிழ்த் தரப்புகளுடன் சேர்ந்து செயற்படப் போவதில்லை. தனி ஆவர்த்தனம்தான் வாசிக்கும் என்று தோன்றுகின்றது.

என்ன செய்வது? தமிழர்களின் தலைவிதி – தலை எழுத்து – இதுதான்.

நெருக்கடியில் கூட – பேரழிவு தரக்கூடிய அழுத்தங்கள், நெருக்குவாரங்கள் மத்தியில் தன்னும் – கூட்டிணைந்து செயற்படாமல் விதண்டாவாதம் பண்ணுவதுதான் தலைவர்களின் திடசித்தம் என்றால் நாங்கள் என்ன செய்ய முடியும்?

★ ★ ★

இப்போது சர்ச்சையைத் தோற்றுவித்திருக்கும் சசிகலா ரவிராஜ் விடயத்தில் ஒரு கொசுறுத் தகவல் மட்டும்.

யாழ்.மாவட்டத் தேர்தல் முடிவுகள் அறிவிக்கப்பட்ட நிலையில், ரவிராஜ் தோற்றுப் போனமையால் எழுந்த அனுதாப அலையில், அந்தத் தேசியப் பட்டியல் எம்.பி. நியமனத்தை திருமதி ரவிராஜ்ஜுக்கு வழங்கலாம் என்றுதான் மாவை சேனாதிராசா உட்பட கூட்டமைப்புத் தலைவர்கள் எல்லோரும் ஆரம்பத்தில் நினைத்தனர்.

ஆனால், அதற்குப் பிறகு சசிகலா ரவிராஜைச் சூழக் கட்டவிழ்ந்த விடயங்கள் கூட்டமைப்புத் தலைவர்களைத் தங்கள் முன்னைய எண்ணப்பாட்டில் இருந்து சடுதியாகப் பின்வாங்க வைத்துவிட்டன என்று நம்பகரமாக அறியவந்துள்ளது.

நேற்றிரவு வரை சசிகலா தரப்பு நடந்து கொண்டவற்றை அவதானித்த கூட்டமைப்பின் மூத்த தலைவர் ஒருவர் *“இத்தகைய போக்குடைய சசிகலாவுக்கு அந்த எம்.பி நியமனத்தை வழங்கி இன்னொரு விக்னேஸ்வரனை அல்லது அனந்தியை உசுப்பேற்றி உருவாக்கி விட நாம் தயாரில்லை.”* – என்று கூறியிருக்கின்றார்.

*“நல்ல வேளை அவர் வெற்றி பெறவில்லை.”* – என்று கூறித் தம்மை ஆசுவாசப்படுத்தினார் அந்தத் தலைவர்.

மத்திய கல்லூரிச் சம்பவங்களுக்கு பின்னர் சசிகலா வாயை மூடிக் கொண்டு வீட்டில் தம்பாட்டில் இருந்திருப்பராயின் சில சமயங்களில் காற்று அவருக்குக் சார்பாக வீசியிருக்கும். பாவம் அம்மையார். எல்லாவற்றையுமே தானே குழப்பியடித்துக் குட்டிச் சுவராக்கி விட்டார் அவர்.

–மின்னல்–

## வன்முறைகள்...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

சிரேஷ்ட பிரதிப் பொலிஸ் மா அதிபர் பிரியந்த வீரசூரிய இதனைக் குறிப்பிட்டார்.

இதுவரை எவ்வித வன்முறைச் சம்பவங்களும் தேர்தல் தொடர்பாக பதிவாகவில்லை. அனைத்து பொலிஸ் பிரிவுகளிலும் பொலிஸார் கடமையில் ஈடுபடுத்தப்பட்டுள்ளனர். பொலிஸ் நடமாடும் சேவைகளும் தொடர்ந்தும் கடமையில் உள்ளன – என்றார் அவர்.

## சசிகலா வீட்டுக்கு...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

முகர்களான அங்கஜன் இராமநாதன், சிவாஜிலிங்கம் மற்றும் அனந்தி சசிதரன் ஆகியோர் நேற்று அதிரடியாகச் சென்றுள்ளனர்.

பொதுதேர்தலின் வாக்கெண்ணும் பணிகளின்போது முறைகேடுகள் இடம்பெற்று சசிகலா ரவிராஜ் தோற்கடிக்கப்பட்டார் என்று சசிகலா தரப்பால் குற்றச்சாட்டு முன்வைக்கப்பட்டுள்ளது.

இது தொடர்பில் அவரைச் சந்திப்பதற்காககவே இந்த மூவரும் நேற்று அவரது வீட்டுக்குச் சென்று சந்தித்துள்ளனர்.

இதன்போது சசிகலாவின் விருப்பு வாக்குகள் எண்ணும் விடயத்தில் நடைபெற்ற முறைகேடுகள் தொடர்பில் சட்ட நடவடிக்கை எடுப்பது தொடர்பில் கலந்துரையாடியுள்ளனர்.

இதன்போது சிவாஜிலிங்கம் கருத்து தெரிவிக்கையில் –

மக்களின் தீர்ப்பை யாரேனும் மாற்றுவதற்கு அனுமதிக்கமுடியாது. மக்களின் தீர்ப்பே மகேசனின் தீர்ப்பு. விருப்புவாக்குகளின் அடிப்படையில் சசிகலாவே இரண்டாவது இடத்தைப் பெற்றிறுருந்தார் எனத் தெரிவிக்கப்பட்டது. அதில் முறைகேடு நடந்து அவர் தோற்கடிக்கப்பட்டார். இனி அவரை சமாளிப்பதற்காக தமிழரசுக் கட்சி தேசியப்பட்டியலில் அவரை நியமிக்கும் –என்றார்.

## சுமந்திரன் செயற்பட்ட...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

இம்முறை நடைபெற்ற தேர்தலில் என் மீது நம்பிக்கை வைத்து எனக்கு வாக்களித்த அனைத்து மக்களுக்கும் நன்றியை தெரிவித்துக் கொள்கிறேன்.

இலங்கை தமிழரசுக் கட்சியை சேர்ந்த பெண் வேட்பாளரான சசிகலா ரவிராஜுக்கு வாக்கெண்ணும் விடயத்தில் அநீதி நடந்துள்ளது. அவரது விடயத்தில் சுமந்திரன் செயற்பட்டவிதம் ஜனநாயகத்திற்கு விரோதமானது.

நாடு முழுவதும் விருப்புவாக்குகள் அறிவிக்கபட்ட பின்பும் யாழ். கிளிநொச்சி தேர்தல் மாவட்டத்திற்கான வாக்குகள் மட்டும் அறிவிக்கப்படவில்லை.

சுமந்திரன் வாக்கெண்ணும் நிலையத்திற்கு வந்த பின்னரே வாக்குகள் அறிவிக்கப்பட்டன. ஆரம்பத்தில் தமிழரசுக் கட்சியின் வேட்பாளரான சித்தார்த்தனின் வாக்குகளிலே முறைக்கேடுகள் செய்வதற்கான நடவடிக்கைகள் மேற்க்கொள்ளப்பட்டன. ஆனால் அது கடினம் என்பதனாலே அரசியல் முன்னனுபவம் இல்லாத சசிகலாவுக்கு அநீதி இழைக்கப்ப ட்டுள்ளது –என்றார்.

## நாமலும்...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

அமைச்சரவை அந்தஸ்தற்ற அமைச்சர்கள் நியமிக்கப்பட உள்ளதாகவும் தெரிய வருகின்றது.

மொஹமட் அலி சப்றி, ஜீ.எல்.பீரிஸ், உதய கம்மன்பில, நாமல் ராஜபக்ஷ ஆகியோரும் அமைச்சரவை அந்தஸ்துள்ள அமைச்சர்களாக பதவியேற்க உள்ளனர் எனக் கூறப்படுகிறது.

அதேவேளை பிரதமர் மஹிந்த ராஜபக்ஷ இன்று புதிய பிரதமராக மீண்டும் பதவியேற்க உள்ளார். மஹிந்த களனி ரஜமகா விகாரையில் பிரதமராக பதவிப் பிரமாணம் செய்துக்கொள்வார்.

இதனையடுத்து கண்டி தலதா மாளிகையில் எதிர்வரும் 14 ஆம் திகதி ஜனாதிபதி கோட்டாபய ராஜபக்ஷ முன்னிலையில், புதிய அமைச்சரவை பதவியேற்க உள்ளது. ஜனாதிபதி கோட்டாபய ராஜபக்ஷவின் இரண்டாவது அமைச் சரவை இதுவாகும்.

## மாவையை...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

பொதுத் தேர்தலில் நின்று தோற்றவருக்குத் தேசியப் பட்டியல் நிறுமனம் கொடுப்பதில்லை என்ற பொதுவான அவிப்பிராயம் தமிழ்க் கூட்டமைப்பில் உள்ள போதிலும் –

யாழ்ப்பாணத்தில் உள்ள மாவை சேனாதிராசாவின் ஆதரவாளர் அவரைத் தேசியப்பட்டியல் இடத்துக்கு நியமிக்க வேண்டும்என்றசெயற்றிட்டத்தைவிரைந்து முன்னெடுத்துள்ளனர்.

2013இலும் மாகாண சபைத் தேர்தல் வந்த போது, மாகாண முதலமைச்சர் வேட்பாளராக மாவை சேனாதிராசாவை நியமிக்கும்படியான கோரிக்கையை இப்படித்தான் யாழ்.மாவட்ட தமிழரசுக் கிளை அதிரடித் தீர்மானமாக அறிவித்து, முன்நகர்த்த முயன்றது.

அதேபாணி, நடவடிக்கை ஒன்றை அவரைத் தேசியப் பட்டியல் எம்.பியாகவும் நியமிக்க வைப்பதற்கும் ஆரம்பிக்கப்பட்டிருப்பதாக அறியவந்தது.

இதன்படி மாவட்டக் கிளையின் 41 பேரில் ஒரு குறிப்பிட்ட தரப்பினருக்கு இன்று கூட்டம் என்ற தகவல் தொலைபேசிச் செய்தியாக நேற்று அறிவிக்கப்பட்டது. கணிசமான எண்ணிக்கையானோருக்கு இன்னும் இன்றைய கூட்டம் பற்றிய தகவல் கிடைக்கவில்லை.

மாவை சேனாதிராசாவை தேசிய பட்டியல் எம்.பியாக நியமிக்க வேண்டும் என்ற கோரிக்கையை சி.வீ.கே.சிவஞானமும், கனகசபாபதியும் நேற்று திருகோணமலைக்கு நேரில் சென்று சம்பந்தனைக் கண்டு வற்புறுத்தி முன் வைத்தனர் எனத் திருகோணமலைச் செய்திகள் தெரிவித்தன.

அவர்கள் திருகோணமலையிலிருந்து நேற்று யாழ்ப்பாணம் திரும்புவதற்குப் புறப்பட்ட பின்னர் கட்சியின் பொதுச் செயலாளர் துரைராஜசிங்கம், பேச்சாளர் சுமந்திரன் ஆகியோருடன் சம்பந்தன் ஆலோசனை கலந்தார் என்றும் அச் செய்திகள் தகவல் வெளியிட்டன.

முன்னர் பொதுத் தேர்தல்களில் போட்டியிட்ட மாவை சேனாதிராசா அத்தேர்தல்களில் தோல்வியுற்ற நிலையில்–

1989இல் அப்பாப்பிள்ளை அமிர்தலிங்கமும், 1999இல் நீலம் திருச்செல்வமும் படுகொலையுண்டபோது அந்த இடங்களுக்கு இரண்டு முறையும் தேசியப் பட்டியல் எம்.பியாகவே நியமனம் பெற்று நாடாளுமன்றம் நுழைந்தார் மாவை சேனாதிராசா.

அதன் பின்னர் 2000, 2001, 2004, 2010, 2015 ஆகிய வருடங்களில் நடைபெற்று ஐந்து தேர்தல்களிலும் வெற்றி பெற்று நாடாளுமன்ற உறுப்பினரானார் அவர்.

நடைபெற்று முடிந்த தேர்தல் அவர் எட்டாவது முறை எம்.பியாவதற்கானதாகும். மாவட்ட ரீதியான தேர்தலில் அவர் தோற்கடிக்கப்பட்டாலும், தேசியப் பட்டியல் மூலம் அவர் நாடாளுமன்றம் நுழைவதை உறுதிப்படுத்துவதற்கு அவருக்கு நெருக்கமானவர்கள் தீவிரமாக உள்ளனர் என்று கூறப்பட்டது.

## கட்சித் தலைவர்...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

அறிக்கையில் மேலும் குறிப்பிடப்பட்டுள்ளதாவது: –

தமிழ் மக்கள் வரலாற்றில் தமிழின விடுதலைப் போராட்டத்தினாலும், போர்க்களினாலும் இனக்கலவரங்களினாலும் தொடர்ச்சியான இன அழிவுகளையும் சமூக பொருளாதார இழப்புக்களையும் அவலங்களையும் தமிழ் மக்கள் சந்தித்துள்ளனர். இவை தொடர்கின்றன. இவற்றுக்கு இன்னுமே ஒரு தீர்வு ஏற்படவில்லை.

இப்போது நடைபெற்று முடிந்த பொதுத் தேர்தலில் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு பல வகையான நெருக்கடிகளுக்கு

மத்தியில் ஆறுதலான ஒரு ஜனநாயக வெற்றியைப் பெற்றிருக்கின்றது. அதே வேளை தேர்தல் நடைமுறை யில் தமிழ்த் தேசியக் கூட்டமைப்புக்கு ஏற்பட்ட பின்னடைவுகளுக்கும் கூட்டமைப்பு பொறுப்பேற்கின்றது. இவை பற்றித் தமிழ்த் தேசியக் கூட்டமைப்புத் தலைமை விரைவில் கூடி ஆராயவுள்ளது.

கடந்த 5ஆம் திகதி நடைபெற்ற பொதுத் தேர்தலில் கொரோனா வைரஸ் நோய் தொற்றுச் சூழலிலும் பெருமளவிலான அரசியல் கட்சிகளும், சுயேச்சைக் குழுக்களும் தீவிர பிரசாரங்களிலும் வேறுபட்ட தேர்தல் அறிக்கைகளை முன்வைத்த போதிலும் வர்த்தக ரீதியிலான பல சலுகைகளையும், வேலைவாய்ப்புக்களையும் முன்வைத்தபோதும் எம் தமிழ் மக்கள் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் தேர்தல் அறிக்கையையும் கருத்துக்களையும் தேர்ந்தெடுத்துக் கணிசமான நாடாளுமன்ற உறுப்பினர்களைத் தேர்ந்தெடுத்துள்ளனர்.

அதற்காக எம் தமிழ்த் தேச மக்களுக்கும் வாக்காளர் பெருமக்களுக்கும் இதயம் நிறைந்த நன்றிகளையும் பாராட்டுக்களையும் தெரிவித்துக்கொள்கின்றோம். தமிழ் மக்களின் விடுதலைக்கும், தமிழ்த் தேச விடுதலைக்கும் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பினர் தம்மை முழுமையாக அர்ப்பணித்து செயற்படுவார்கள் எனவும் உறுதிபடத் தெரிவித்துக் கொள்கின்றோம்.

அத்தோடு தமிழரசுக் கட்சியின் உயர் பீடமும் (அரசியல் குழுவும்) அடுத்து மத்திய செயற்குழுவும் கூட்டப்பட்டு தேர்தல்

காலத்திலும் தேர்தல் காலத்துக்கு அண்மித்த காலப்பகுதியிலும் நடைபெற்ற நிகழ்ச்சிகளில் உறுப்பினர்கள் நடவடிக்கை தொடர்பில் பூரணமாக விசாரனை நடத்தி அறிக்கை சமர்ப்பிக்கப்படவுள்ளது. அதன்படி நடவடிக்கைக்குழு பொருத்தமான நடவடிக்கைகளை எடுக்கும்.

தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு தேர்தலில் அடைந்த வெற்றி ஏற்பட்ட இழப்புத் தொடர்பில் கூட்டமைப்பு உயர்பீடம்

ஆராய்ந்து அறிக்கை சமர்ப்பிப்பதற்கு முன் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு சார்பில் தேர்தல் தொடர்பில் கேள்வி எழாமலே வெளியிடப்பட்ட தன்னிச்சையான கூட்டுப் பொறுப்பற்ற பத்திரிகை செய்திகள் மீண்டும் கட்சிகளுக்குள்ளும் மக்களிடத்திலும் விமர்சனங்களையும், சர்ச்சைகளையும் ஏற்படுத்தியுள்ளன. இவை கட்டுப்படுத்தப்பட வேண்டும்.

மிக விரைவில் உரிய வேளையில் தேசியப் பட்டியல் நியமனம் தொடர்பில் தமிழரசுக் கட்சி உயர்மட்டக் குழுவும் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் உயர்மட்டக் குழுவும் தனித் தனியே ஆராய்ந்து கூட்டாக முடிவை அறிவிக்கவுள்ளன. தமிழரசுக் கட்சியின் தலைவர், பொதுச் செயலாளர் மற்றும் ஏனைய பதவிப் பொறுப்புக்கள் தொடர்பில் தமிழரசுக் கட்சியின் மாநாடும், பொதுக்குழுவுமே கட்சி யாப்பின்படி தீர்மானங்களை எடுக்கவல்லதாகும்.

பொதுவெளியில் பத்திரிகையாளர் மாநாட்டில் மேற்குறித்த பதவிப் பொறுப்புக்கள் தீர்மானிக்கப்படுவதில்லை என்பதனைத் தெரிவித்துக்கொள்கின்றோம் – என்றுள்ளது

# எனது அரசியல் பயணம் முடியவில்லை; மாகாண சபைத் தேர்தலில் குதிப்பேன்!



பொதுத்தேர்தல்தான் முடிவடைந்துள்ளது. எனது அரசியல் பயணம் முடியவில்லை. எனவே, வருகின்ற மாகாண சபைத் தேர்தலில் நிச்சயம் போட்டியிடுவேன்.

## கலாநிதி ஜனகன் அறிவிப்பு

– இவ்வாறு ஐக்கிய மக்கள் சக்தியின் கீழ் கொழும்பு மாவட்டத்தில்போட்டியிட்டகலாநிதி.வி.ஜனகன்தெரிவித்தார்.

கொழும்பில் நேற்று நடைபெற்ற ஊடகவியலாளர் சந்திப்பில் உரையாற்றுகையிலேயே அவர் மேற்கண்டவாறு கூறினார்.

அவர் மேலும் தெரிவித்ததாவது:–

2020 நாடாளுமன்றத் தேர்தலில் தமிழ் பேசும் சமூகம் அக்கறையுடன்வாக்களித்துள்ளமைவரவேற்கத்தக்க விடயம். கொழும்பு மாவட்டத்தைப் பொறுத்தவரையில் கணிசமான அளவு வாக்குப்பதிவு இடம்பெற்றுள்ளமை மகிழ்ச்சியளிக்கின்றது.

அத்துடன் தமிழ் பேசும் சமூகம் 70 சதவீதம் தமது வாக்கினைப் பதிவு செய்துள்ளமை பாராட்டதக்க விடயம்.

நாடாளுமன்றத்தேர்தல்சுமுகமாக இடம்பெறுவதற்கும், எனக்கு ஆதரவளித்த கொழும்பு மாவட்ட பொதுமக்கள், கட்சித் தலைமை, ஆதரவாளர்கள், வாக்காளர்கள் மற்றும் ஊடகவியலாளர்கள் என அனைத்துத் தரப்பினருக்கும் நன்றிகளைத் தெரிவித்துக்கொள்கின்றேன்.

அதேவேளை, மக்கள் ஆணையைப் பெற்றே எனது அரசியல் பயணம் தொடர வேண்டும் என நினைக்கின்றேன். எனவே, தேசியப்பட்டியல் வாய்ப்பைப் கோர மாட்டேன். அடுத்து நடைபெறும் மாகாண சபைத் தேர்தலில் நிச்சயம் போட்டியிடுவேன்; மக்கள் ஆதரவைப் பெறுவேன் – என்றார்.

## விக்கிபோல் கஜனும்...

**(முதலாம் பக்கத் தொடர்ச்சி)**

கட்சியான ரெலோவின் தலைவரும் வன்னி மாவட்டத்திலிருந்து நாடாளுமன்றத்துக்குத் தெரிவாகியுள்ளவருமான செல்வம் அடைக்கலநாதன் தெரிவித்தார்.

நாடாளுமன்றத்துக்குள்ளே நாங்கள் அனைவரும் ஒன்றாகச் செயற்படுகின்ற சந்தர்ப்பத்தை நிச்சயம் உருவாக்குவோம் எனவும் அவர் குறிப்பிடடார்.

மன்னாரிலுள்ள அவரின் அலுவலகத்தில் நேற்று நடத்திய ஊடகவியலாளர் சந்திப்பிலேயே அவர் மேற்கண்டவாறு கூறினார்.

அவர் மேலும் தெரிவித்ததாவது:–

இந்தத் தேர்தலில் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு சில சிந்தனைகளைக் கருத்தில்கொள்ள வேண்டும் என்பதிலே மக்கள் தங்களுடைய கருத்தைப் பதிவிட்டுள்ளார்கள் என்பதுதான் என்னுடைய கருத்து.

கூட்டமைப்புக்குள் ஒற்றுமை இல்லை என்பதை வெளிப்படையாக மக்கள் ஏற்றுக்கொள்ளவில்லை. ஒற்றுமை இல்லாமல் செயற்பட வேண்டாம் என்ற அந்த நிலைப்பாட்டில் மக்கள் தங்களுடைய வாக்குரிமையைப் பயன்படுத்தியுள்ளனர்.

அந்தவகையில் 16 ஆசனங்களைக்கொண்டிருந்த நாங்கள் இன்று 10 ஆசனங்களுடன் இருக்கின்றோம் என்றால் சிந்திக்கப்பட வேண்டிய விடயம்.

இனிவரும் காலங்களில் அபிவிருத்தி சம்பந்தமாகவும் நாங்கள் சிந்திக்கவேண்டும் என்பதை மக்கள் உணர்த்தியுள்ளார்கள்.

யாழ்ப்பாணத்தைப் பொறுத்தவரை கூடுதலாக தமிழ்க் கட்சிகளுக்கே மக்கள் ஆணை தந்துள்ளார்கள். சமமான முறையில் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு 3 ஆசனங்களைப் பெற்றிருந்தாலும் ஏனையவர்களும் வாக்குகளைப் பெற்று ஆசனங்களைப் பெற்றிருக்கின்றார்கள்.

மக்களுடைய விருப்பம் நாங்கள் அனைவரும் ஒற்றுமையாகச் செயற்படுவதே. தமிழ் மக்கள் தேசியக் கூட்டணியின் தலைவர் சி.வி.விக்னேஸ்வரன் எம்முடன் இணைந்து செயற்படவுள்ளார் என்று தெரிவித்திருந்தார். குறித்த விடயம் வரவேற்கத்தக்கது. அதேபோல் கஜேந்திரகுமார் பொன்னம்பலமும் எம்முடன் இணைந்து செயற்பட வேண்டும்.

தனிப்பட்ட நபர்கள் மீது விருப்பு ! வெறுப்புகளை ஒரு பக்கம் வைத்துவிட்டு தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் சார்பாக நாங்கள் செயற்படவேண்டும்.

நாடாளுமன்றத்துக்குள்ளே நாங்கள் எல்லோரும் ஒன்றாகச் செயற்படுகின்ற சந்தர்ப்பத்தை நிச்சயமாக உருவாக்க முயற்சிக்கின்றோம்.

அந்தவகையில் கஜேந்திரகுமாருடனும் விக்னேஸ்வரனுடனும் நாங்கள் பேச இருக்கின்றோம். எங்களுடைய மக்கள் நலன் சார்ந்த விடயங்களில் நாங்கள் ஒன்றாகச் செயற்படுவதற்கான முயற்சிகளை மேற்கொள்ள இருக்கின்றோம்.

எங்களுடைய தமிழ்ப் பிரதேசத்தில் ஸ்ரீலங்கா பொதுஜன முன்னணி மற்றும் ஐக்கிய மக்கள் சக்தி ஆகிய கட்சிகளுக்கு வாக்குகள் கூடுதலாக வழங்கப்பட்டுள்ளன.

எங்களுடைய பிரதேசத்தில் மக்களுடைய சிந்தனை அபிவிருத்தியாக இருக்கின்றது. தங்களுடைய கஷ்டங்களைப் போக்க வேண்டும் என்பதை இந்தத் தேர்தலில் வாக்களிப்பின் ஊடாக மக்கள் காட்டியுள்ளார்கள்.

தமிழ்த் தேசியக் கூட்டமைப்பைப் பொறுத்தமட்டில் மக்கள் தங்களுடைய கிராமத்தில் அபிவிருத்தி உட்பட எல்லா வசதிகளோடும் இருக்க வேண்டும் என்பதே விருப்பம். அதற்காக நாங்கள் ஓரணியில் செயற்படுவோம்.

அபிவிருத்தி என்பது முக்கியமான விடயம். அந்த அபிவிருத்தி இல்லாத காரணத்தால்தான் கண்டவர்களும் எமது தேசத்துக்குள் மூக்கை நுழைக்கின்ற செயற்பாடு அமைந்திருக்கின்றது.

இளைஞர், யுவதிகளுக்கான வேலைவாய்ப்பு என்பது அரச வேலைவாய்ப்பை மட்டும் பெற்றுக் கொடுக்க வேண்டும் என்பது அல்ல. அவர்கள் சொந்தக் காலில் நிற்க அதற்கான ஒரு வசதி வாய்ப்புக்களை செய்து கொடுக்க முடியும்.

அந்தத் திட்டங்களை நாங்கள் உடனடியாக நடைமுறைப்படுத்துவதற்கான செயற்பாடுகளைக் கண்டிப்பாகச் செய்வோம்.

எங்களுடைய பிரதேசத்தில் இனி எந்தச் சிங்களக் கட்சிகளும் முஸ்லிம் கட்சிகளும் போட்டியிடாதவாறு தமிழ் வாக்குகளை நாம் பாதுகாக்க வேண்டும்

வன்னி மாவட்டத்தில் 405 வேட்பாளர்கள் போட்டியிட்ட சூழலில் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பை மேலும் உயர்த்தி வைத்த மக்களுக்கு நன்றியைத் தெரிவித்துக்கொள்ள விரும்புகின்றேன்.

மேலும் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் தேசியப் பட்டியல் என்ற ஒரு சர்ச்சை தற்போது எழுந்துள்ளது.

தேசியப்பட்டியல் ஆசனம் நியாயமான முறையில் வழங்கப்பட வேண்டும். என்னைப் பொறுத்த மட்டில் மக்கள் நிராகரித்தவர்களுக்கு என்ன செய்வது என்பது தொடர்பாக சிந்திக்க வேண்டும்.

தமிழ்த் தேசியக் கூட்டமைப்பைப் பொறுத்த மட்டில் பங்காளிக் கட்சிகளோடு சேர்ந்துதான் ஒரு முடிவு எட்டப்பட வேண்டும். தமிழரசுக் கட்சி தனியாக முடிவு எடுக்கக் கூடாது என்பது எனது கருத்து. நாங்கள் மூன்று பங்காளிக் கட்சிகளும் இணைந்து யாரை தேசியப்பட்டியல் ஊடாக நியமிப்பது தொடர்பாக தீர்மானம் எடுக்க வேண்டும்.

இந்த விடயத்தில் எல்லோருக்கும் உரித்து உள்ளது. இந்தத் தேசியப் பட்டியல் ஊடாக யாரும் நினைத்தவரைக் கொண்டு வருவதற்கான வாய்ப்பை ஒருபோதும் நாங்கள் அனுமதிக்கக்கொள்ளமாட்டோம். ஆகவே, எங்களுடன் பேச வேண்டும். இந்தப் பேச்சின்போதே ஊடாக நாங்கள் ஒற்றுமையான ஒரு தீர்மானத்தை எடுக்க வேண்டும்! என்றார்.

## சசிகலாவை இராஜினாமாச் செய்யுமாறு எவரும் அழுத்தம் பிரயோகிக்கவில்லை

### அவரே இப்போது இப்படிக் கூறுகின்றாராம்




கொழும்பு,ஓக.09

"என்னை இராஜினாமாச் செய்யுமாறு எவரும் அழுத்தம் பிரயோகிக்கவில்லை"என யாழ்.தேர்தல் மாவட்டத்தில் தமிழரசுக் கட்சி சார்பில் போட்டியிட்ட சசிகலா ரவிராஜ் தெரிவித்துள்ளார்.

– இவ்வாறு ஐ.பி.ஸி. தமிழ் செய்தி நிறுவனம் நேற்று செய்தி வெளியிட்டது. அந்தச் செய்தியில் மேலும் தெரிவிக்கப்படவை வருமாறு:–

நடைபெற்று முடிந்துள்ள பொதுத்தேர்தல் முடிவுகள் வெளியாகியுள்ள நிலையில், தமிழ் தேசியக் கூட்டமைப்பினால் அநீதி இழைக்கப்பட்டுள்ளதாகவும் பெண் பிரதிநித்துவம் தொடர்பாக சதி இடம்பெற்றுள்ளதாகவும் கருத்து மோதல்கள் இடம்பெறுவதுடன் அதற்கு எதிராக போராட்டம் நடத்தப்பட்டு வருகின்றது.

இந்நிலையிலேயே அவர் (சசிகலா ரவிராஜ்) இவ்வாறு தெரிவித்துள்ளார்.

அவர் மேலும் தெரிவிக்கையில் –

கட்சியின் தலைமைகளுடன் இவ்விடயம் தொடர்பாக பேச்சுவார்த்தையில் ஈடுபட்டுள்ளேன். எனவே இவ்விடயத்தில் அவர்கள்தான் தீர்மானம் எடுக்க வேண்டும். அத்துடன் ஆதரவாளர்களின் எண்ணங்களில்தான் எனது வெற்றி வாய்ப்பு குறித்து பேசப்பட்டது.

இவ்வாறு ஆதரவாளர்களும் என்மீது முழுமையான நம்பிக்கையில் இருந்தபோதும் பெறுபேறுகள் முடிவுகளில் பின்தள்ளப்பட்டுள்ளமை பெரும் அதிர்ச்சியை ஏற்படுத்தியுள்ளது. குறித்த முடிவை நான் ஒருபோதும் நினைத்துக்கூட பார்க்கவில்லை.

அத்துடன் மத்தியகல்லூரியில் நிகழ்ந்த சம்பவத்தில், பாதுகாப்பு படையினர் இறக்கப்பட்டமை குறித்தே சுமந்திரன் மீது அதிருப்தி கொண்டேன். மாறாக வெளியான பெறுபேறு குறித்து அவரை நான் குறிப்பிடவில்லை.

மேலும் எனக்கு எவரும் அழுத்தம் பிரயோகிக்கவில்லை என அவர் மேலும் தெரிவித்துள்ளார்.

– இவ்வாறு அந்தச் செய்தி அமைந்திருந்தது.



நமது பார்வை

உண்மை - நேர்மை - பக்கம் சாராமை

ஆசிரியபீடம்: 30, கல்லூரி வீதி, யாழ்ப்பாணம்
தொலைபேசி - 021 222 3000
மின்னஞ்சல் -kalaikkathirnews@gmail.com
இணையம் - onlinekathir.com

# சர்வதேச தரப்புகளின் அழுத்தம் தவிர்க்க முடியாததாக இருக்கும்

உயர்விலும் பணிவு வேண்டும் என்பார்கள்.

உயர்வில் மமதை வந்தால் அது வீழ்ச்சிக்குத்தான் வழி வகுக்கும்.

நாடாளுமன்றத் தேர்தலில் மூன்றில் இரண்டு பங்கு பெரும்பான்மையைச் சுவீகரித்திருக்கும் பொதுஜன பெரமுனவின் தவிசாளர் பேராசிரியர் ஜி.எல்.பீரிஸ் எந்தவொரு சர்வதேச நாட்டுக்கும், அமைப்புக்கும் நாம் அடிபணிந்து செயற்பட மாட்டோம் என்று முழங்கியிருக்கின்றார்.

ஆனால் பதினெட்டு ஆண்டுகளுக்கு முன்னர், நோர்வேயின் தலைநகர் ஒஸ்லோவில் 'எஸ்.ஏ.எஸ் ஹோட்டலில்', பக்கத்தில் விடுதலைப் புலிகளின் மதியுரைஞர் அன்ரன் பாலசிங்கத்தையும் வைத்து கொண்டு *"உள்ளக சுயநிர்ணய உரிமைக் கோட்பாட்டின் அடிப்படையில், தமிழ்ப் பேசும் மக்களின் வரலாற்றுத் தாயகத்தில், ஐக்கியமான இலங்கைக்குள், சமஷ்டி ஆட்சி முறை தழுவிய தீர்வு ஒன்றை ஆராய்ந்து பார்ப்பதற்கு இணக்கம் கண்டிருக்கின்றோம்."* என்று அறிவித்த இலங்கை அரசுத் தரப்பின் தலைமைப் பிரதிநிதி இதே ஜி.எல்.பீரிஸ்தான்.

காலங்கள் மாறிவிட்டன. தரப்புகளும் மாறி விட்டன. அன்று வலிமையோடு தமிழர் தாயகத்தில் ஒரு நிழல் அரசையே நடத்திக் கொண்டிருந்த விடுதலைப் புலிகள் அமைப்பு இன்று இல்லை. பேராசிரியர் ஜி.எல்.பீரிஸும் அன்று போல - அன்று ஆட்சியில் இருந்த - ஐக்கிய தேசியக் கட்சியில் இல்லை.

விடுதலைப் புலிகளை நிர்மூலமாக்கிய சிங்களத் தலைவர்களான மஹிந்த ராஜபக்ஷ - கோட்டாபய ராஜபக்ஷ தரப்பின் - பொதுஜன பெரமுன தரப்பின் - தவிசாளர் இப்போது ஜி.எல்.பீரிஸ். அத்தோடு அவரது கட்சி தற்சமயம் நாடாளுமன்றத்தில் மூன்றில் இரண்டு பங்கு பெரும்பான்மை என்ற வரலாற்று வெற்றியைப் ஈட்டியிருக்கின்றது.

அந்த மிதப்பில் - திமிரில் - *'எந்தவொரு சர்வதேச நாட்டுக்கும், அமைப்புக்கும் நாம் அடிபணிந்து செயற்பட மாட்டோம்'* என்று பிரகடனப்படுத்துகின்றார் மொட்டுக் கட்சியின் தவிசாளர்.

நல்லது. கிடைத்திருக்கும் மூன்றில் இரண்டு பங்கு பெரும்பான்மையை வைத்துக் கொண்டு அரசமைப்பு மாற்றம் உட்பட பல தடலாடி நடவடிக்கைகளை முன்னெடுப்பதற்கு ராஜபக்ஷக்கள் தயாராகி வருகின்றனர் என்பது வெளிப்படையானது.

நாட்டின் அரசமைப்பை மாற்றுவதோ, திருத்துவதோ உள்நாட்டு விவகாரம். அது தொடர்பில் சர்வதேச பங்களிப்பு, ஈடுபாடு எங்கு வருகிக்னறது என்று கேள்வி எழலாம்.

இலங்கையின் அரசமைப்பில் சில விடயங்கள் சர்வதேச ஈடுபாடு காரணமாக உள்செலுத்தப்பட்டவை.

அதிகாரப் பரவலாக்கத்துக்கான 13ஆவது அரசமைப்புத் திருத்தம் -

சட்டம் மற்றும் நீதியின் ஆட்சியை உறுதிப்படுத்தும் விதத்தில் சுயாதீன மனித உரிமைகள் ஆணைக்குழு போன்றவற்றை அமைக்க வழி செய்த 19ஆவது அரசமைப்புத் திருத்தம் -

போன்றவை எல்லாம், இலங்கை அரசமைப்பின் அங்கங்கள் என்றாலும், அவற்றுடன் இந்தியா உட்பட சர்வதேச சமூகத்தின் ஈடுபாடு, கவலை, கரிசனை யாவும் உண்டு.

ஆகவே, நாடாளுமன்றத்தில் மூன்றில் இரண்டு பங்கு பெரும்பான்மை கிட்டிவிட்டது, மக்கள் எங்களுக்கு ஏகோபித்து ஆணை தந்து விட்டார்கள் என்றெல்லாம் கூத்தடித்தபடி - நினைத்தவாறு - அரசமைப்பு மாற்றத்தை ராஜபக்ஷக்கள் தரப்பு செய்ய முடியாது.

இவ்விடயங்களில் நீதியான, நியாயமான செயற்போக்குக்கான கரிசனையும் அழுத்தமும் நிச்சயம் சர்வதேச தரப்புகளிடமிருந்து ராஜபக்ஷக்களின் அரசுக்கு வரும் என்பது வெள்ளிடைமலை.

அதை ஊகித்துக் கொண்டுதான், எந்த சர்வதேச தரப்புக்கும், அமைப்புக்கும் அடிபணியோம் என்று நேரத்துடன் அரசியல் ஸ்டண்ட்' பாணியில் கூளுரைக்கின்றார் ஜி.எல்.பீரிஸ் என்பது அப்பட்டமாகத் தோற்றுகின்றது.

யுத்தக் குற்றங்கள், மனித உரிமை மீறல்கள், மனித குலத்துக்கு எதிரான கொடூரங்களைப் புரிந்தவர்கள் சட்டத்தின் முன் நிறுத்தப்படாமல் - தண்டிக்கப்படாமல் - பொறுப்புக் கூறலுக்கு உட்படுத்தப்படால் - சுதந்திரமாகத் திரிகின்றார்கள். அவர்களுக்குக் கண்மூடித்தனமான முறையில் சட்ட விலக்களிப்பு வழங்கப்பட்டிருப்பதாக சர்வதேசம் கவலை கொண்டுள்ளது.

இந்த சட்ட விலக்களிப்பு விவகாரத்துக்கு முடிவு கட்டாமல், அரமைப்பு மாற்றம், திருத்தம், புதுப்பித்தல் என்ற முயற்சிகளை ராஜபக்ஷ அரசு ஆரம்பிக்கும் போது நிச்சயம் சர்வதேசப் பங்களிப்பும் அழுத்தமும் கரிசனையும் ஏதோ ஒரு மட்டத்தில் - ஏதோ ஒரு விதத்தில் - ஏதோ ஒரு மார்க்கத்தில் - நிச்சயம் வந்தே தீரும். அதனை பொதுஜன பெரமுன அரசு எதிர்கொள்வது தவிர்க்க முடியாததாக இருக்கும்.

# தமிழ், முஸ்லிம் சார்பில் 47 பிரதிநிதிகள் சபைக்கு

நடைபெற்று முடிந்த நாடாளுமன்றத் தேர்தலில் தமிழ், முஸ்லிம்கள் சார்பில் வாக்களிப்பு மூலம் 41 பிரதிநிதிகளும், தேசியப் பட்டியல் மூலம் 6 பிரதிநிதிகளும் தெரிவாகியுள்ளனர்.

தமிழர்கள் சார்பில் 28 உறுப்பினர்களும், முஸ்லிம்கள் சார்பில் 19 பிரதிநிதிகளும் இதில் அடங்குகின்றனர்.

### யாழ். தேர்தல் மாவட்டம்

இலங்கைத் தமிழரசுக் கட்சி சார்பில் சிவஞானம் சிறிதரன், எம்.ஏ சுமந்திரன், தர்மலிங்கம் சித்தார்த்தன் ஆகியோரும், ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சி சார்பில் அங்கஜன் இராமநாதனும், ஈழ மக்கள் ஜனநாயகக் கட்சி சார்பில் அதன் செயலாளர் நாயகம் டக்ளஸ் தேவனந்தாவும், அகில இலங்கை தமிழ்க் காங்கிரஸ் சார்பில் அதன் தலைவர் கஜேந்திரகுமார் பொன்னம்பலமும், தமிழ் மக்கள் தேசியக் கூட்டணியின் தலைவர் சி.வி விக்னேஸ்வரனும் வெற்றி பெற்றுள்ளனர்.

### வன்னி தேர்தல் மாவட்டம்

இலங்கைத் தமிழரசுக் கட்சி சார்பில் சார்ள்ஸ் நிர்மலநாதன், செல்வம் அடைக்கலநாதன், எஸ்.வினோ நோகராதலிங்கம் ஆகியோரும், ஐக்கிய மக்கள் சக்தி சார்பில் ரிஷாத்பதியுதீனும், ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சி சார்பில் காதர் மஸ்தானும், ஈழ மக்கள் ஜனநாயகக் கட்சியின் சார்பில் குலசிங்கம் திலீபனும் தெரிவு செய்யப்பட்டுள்ளனர்.

### திருகோணமலை மாவட்டம்

இலங்கைத் தமிழரசுக் கட்சி சார்பில் இரா. சம்பந்தன் வெற்றி பெற்றுள்ளார். ஐக்கிய மக்கள் சக்தி சார்பில் எஸ்.எம்.தௌபீக், இம்ரான் மஹ்ரூப் ஆகியோர் தெரிவு செய்யப்பட்டுள்ளனர்.

### மட்டக்களப்பு மாவட்டம்

தமிழ் மக்கள் விடுதலைப் புலிகள் கட்சியின் சார்பில் பிள்ளையான் என அறியப்படும் சிவநேசத்துரை சந்திரகாந்தனும், இலங்கைத் தமிழரசுக் கட்சி சார்பில் இரா.சாணக்கியன், கோவிந்தன் கருணாகரம் ஆகியோரும், ஸ்ரீலங்கா பொதுஜன முன்னணி சார்பில் சதாசிவம் வியாழேந்திரனும், ஸ்ரீலங்கா முஸ்லிம் காங்கிரஸ் சார்பில் ஹாபீஸ் நஸீர் அஹமட்டும் வெற்றி பெற்றுள்ளனர்.

### அம்பாறை மாவட்டம்

ஐக்கிய மக்கள் சக்தி சார்பில் எம்.எச்.எம் ஹரீஸ், பைஸல் காசீம் ஆகியோரும், தேசிய காங்கிரஸ் சார்பில் ஏ. எல்.எம். அதாவுல்லாவும், அகில இலங்கை மக்கள் காங்கிரஸ் சார்பில் மொஹமட் முஸாரப்பும் தெரிவு செய்யப்பட்டுள்ளனர்.

### கண்டி மாவட்டம்

ஐக்கிய மக்கள் சக்தி சார்பில் ரவூப் ஹக்கீம், அப்துல் ஹலீம், எம். வேலுகுமார் ஆகியோர் வெற்றி பெற்றுள்ளனர்.

### நுவரெலியா மாவட்டம்

ஐக்கிய மக்கள் சக்தி சார்பில் பழனி திகாம்பரம், வேலுசாமி இராதாகிருஷ்ணன், மயில்வாகனம் உதயகுமார் ஆகியோரும், ஸ்ரீலங்கா பொதுஜன முன்னணி சார்பில் ஜீவன் தொண்டமான், மருதபாண்டி ராமேஸ்வரன் ஆகியோரும் தெரிவு செய்யப்பட்டுள்ளனர்.

### பதுளை மாவட்டம்

ஐக்கிய மக்கள் சக்தி சார்பில் வடிவேல் சுரேஷ், அ.அரவிந்தகுமார் ஆகியோர் வெற்றி பெற்றுள்ளனர்.

### கேகாலை மாவட்டம்

ஐக்கிய மக்கள் சக்தி சார்பில் கபீர் ஹாசீம் தெரிவு செய்யப்பட்டுள்ளார்.

### அநுராதபுரம் மாவட்டம்

ஐக்கிய மக்கள் சக்தி சார்பில் இசாக் ரஹ்மான் வெற்றி பெற்றுள்ளார்.

### கொழும்பு மாவட்டம்

ஐக்கிய மக்கள் சக்தி சார்பில் எஸ்.எம் மரிக்கார், முஜிபுர் ரஹ்மான, மனோ கணேசன் ஆகியோர் தெரிவு செய்யப்பட்டுள்ளனர்.

### புத்தளம் மாவட்டம்

முஸ்லிம் தேசியக் கூட்டணி சார்பில் அப்துல் அலி சப்ரின் வெற்றி பெற்றுள்ளார்.

### தேசியப் பட்டியல்

ஸ்ரீலங்கா பொதுஜன முன்னணி சார்பில் நான்கு சிறுபான்மையின பிரதிநிதிகளுக்கு தேசியப் பட்டியல் நாடாளுமன்ற உறுப்புரிமை வழங்கப்பட்டுள்ளது. கலாநிதி சுரேன் ராகவன், ஜனாதிபதி சட்டத்தரணி மொஹமட் அலி சப்ரி, மொஹமட் முஸம்மில், வர்த்தகர் மொஹமட் பலீல் மர்ஜான் ஆகியோருக்கு தேசியப் பட்டியல் உறுப்புரிமை கிடைத்துள்ளது.

இதேவேளை, இலங்கைத் தமிழரசுக் கட்சி, அகில இலங்கை தமிழ்க் காங்கிரஸ் என்பவற்றுக்கு தலா ஓர் தேசியப் பட்டியல் ஆசனங்கள் கிடைத்துள்ளன.

# மன்னார் பரப்பாங்கண்டல் பகுதியில் 5 கிலோ கஞ்சாவுடன் ஒருவர் கைது!

மன்னார், பரப்பாங்கண்டல் பிரதேசத்தில் மோட்டார் சைக்கிள் ஒன்றில் கேரள கஞ்சா தொகையொன்றைக் கடத்திய நபரொருவர் கைது செய்யப்பட்டுள்ளார்.

பொலிஸ் விசேட அதிரடிப்படையின் மன்னார் முகாம் அதிகாரிகள் குழுவொன்றினால் மேற்கொள்ளப்பட்ட சுற்றிவளைப்பில் சந்தேக நபர் கைது செய்யப்பட்டார் எனப் பொலிஸார் தெரிவித்தனர்.

சந்தேகநபரிடம் இருந்து 5 கிலோ 252 கிராம் கேரள கஞ்சா பறிமுதல் செய்யப்பட்டுள்ளது. கைது செய்யப்பட்ட சந்தேகநபர் 33 வயதுடைய யாழ்ப்பாணம், சுழிபுரம் பிரதேசத்தை சேர்ந்தவர் எனத் தெரிவிக்கப்படுகிறது.

சந்தேகநபர் இன்று மன்னார் நீதவான் நீதிமன்றில் முன்னிலைப்படுத்தப்படவுள்ள நிலையில் மன்னார் பொலிஸார் மேலதிக விசாரணைகளை மேற்கொண்டு வருகின்றனர்.

# எட்டுப் பெண்கள் இம்முறை நாடாளுமன்றுக்குத் தெரிவு

## தேசியப் பட்டியலில் மேலும் இருவர்

கொழும்பு, ஒக.08

நடைபெற்று முடிந்த பொது தேர்தல் மூலம் 8 பெண்கள் நாடாளுமன்ற உறுப்பினர்களாக மக்களால் தெரிவு செய்யப்பட்டுள்ளனர்.

இரத்தினபுரி மாவட்டத்தில் ஸ்ரீலங்கா பொதுஜன பெரமுன சார்பில் பவித்ரா வன்னியாராச்சி, முதித சொய்சா ஆகியோரும் ஐக்கிய மக்கள் சக்தி சார்பில் தலத்தா அத்துகோரளையும் தெரிவு செய்யப்பட்டுள்ளனர்.

கேகாலை மாவட்டத்தில் ஸ்ரீலங்கா பொதுஜன பெரமுன சார்பில் ரஜீகா விக்ரமசிங்க தெரிவு செய்யப்பட்டுள்ளார்.

கம்பஹா மாவட்டத்தில் ஸ்ரீலங்கா பொதுஜன பெரமுன சார்பில் சுதர்ஷினி பெர்னாண்டோ பிள்ளை மற்றும் கோகிலா குணவர்தன ஆகியோர் தெரிவு செய்யப்பட்டுள்ளனர்.

காலி மாவட்டத்தில் ஸ்ரீலங்கா பொதுஜன பெரமுன சார்பில் கீதா குமாரசிங்க தெரிவு செய்யப்பட்டுள்ளார்.

மாத்தளை மாவட்டத்தில் ஐக்கிய மக்கள் சக்தி சார்பில் ரோஹினி கவிரத்ன தெரிவு செய்யப்பட்டுள்ளார்.

ஸ்ரீலங்கா பொதுஜன பெரமுன தேசிய பட்டியலில் விசேட வைத்திய நிபுணர் சீதா அரம்பே பொலவை தெரிவு செய்துள்ளது. ஐக்கிய மக்கள் சக்தி டயனா கமகேயை தெரிவு செய்துள்ளது.

இதன் மூலம் இம்முறை பாராளுமன்றத்தில் 10 பெண் உறுப்பினர்கள் அங்கம் வகிக்கவுள்ளமை குறிப்பிடத்தக்கது.

# ஐக்கிய தேசியக் கட்சியின் தோல்விக்கு இன்னொருவரை குறைகூற வேண்டாம்

## அக்கட்சியின் பிரமுகர் வஜிர அபேவர்த்தன கூறுகின்றார்



ஐக்கிய தேசியக் கட்சியின் தோல்வி தொடர்பாக நாம் இன்னொருவரை குறைகூற வேண்டியத் தேவைக் கிடையாது என முன்னாள் நாடாளுமன்ற உறுப்பினர் வஜிர அபேவர்த்தன தெரிவித்துள்ளார்.

பொதுத் தேர்தலில் ஐக்கிய தேசியக் கட்சி படுதோல்வியைச் சந்தித்ததை அடுத்து, நேற்று அந்தக் கட்சியின் முக்கியஸ்தர்களுக்கு இடையில் விசேட கூட்டமொன்று சிறிகொத்தவில் இடம்பெற்றது. இதன் நிறைவில் ஊடகங்களுக்கு கருத்து வெளியிடும் போதே அவர் இவ்வாறு குறிப்பிட்டுள்ளார்.

இதன்போது கருத்து வெளியிட்ட அவர் –

ஐக்கிய தேசியக் கட்சியின் தோல்வி தொடர்பாக நாம் இன்னொருவரைக் குறைகூற வேண்டியத் தேவை கிடையாது.

அரசாங்கத்துக்கு இன்று மூன்றில் இரண்டு பெரும்பான்மைப் பலம் கிடைத்துள்ளது. இது சரியா – தவறா என எம்மால் கூறமுடியாது.

ஆனால், இதற்கு காரணம் சஜித் பிரேமதாஸதான். பொதுத் தேர்தலில் அவர் இல்லாமல் போயுள்ளமையுடன், ஐக்கிய தேசியக் கட்சியையும் இல்லாது செய்துள்ளார்.

ஜனாதிபதித் தேர்தலின்போது நாம் அவருக்கான முழுமையான ஆதரவை வழங்கினோம். இதை இல்லையென்று கூற முடியாது. எனினும், அந்தத் தேர்தலில் வெற்றி பெறமுடியாது போனது. இதன் ஊடாக எமது வாக்குவீதம் குறைவடைந்துள்ளது.

இந்தத் தோல்வியை அடுத்து கட் சியின் தலைமையில் மாற்றம் வேண் டும் என கூறினாலும், இப்போது அதுதொடர்பாக நாம் எந்தவொரு தீர்மானத்தையும் எடுக்கவில்லை எனத் தெரிவித்துள்ளார்.

# கோட்டாவுக்கு மைத்திரி ஆதரவு

முன்னாள் ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேன ஜனாதிபதி கோட்டாபய ராஜபக்ஷவுக்கு தனது ஆதரவை வெளியிட்டுள்ளார்.

பொலன்னறுவையில் நேற்று ஊடகங்களுக்கு கருத்து வெளியிட்ட அவர் இதனை கூறியுள்ளார்.

ஜனாதிபதி கோட்டாபய ராஜபக்ஷவின் புதிய அரசாங்கத்தின் கீழ் நாட்டை அபிவிருத்திசெய்வதற்கும் வளமான பொருளாதாரத்தை அபிவிருத்தி செய்வதற்கும் தன்னை அர்ப்பணிப்பு செய்யப்போகிறார் என அவர் தெரிவித்துள்ளார்.

அத்துடன், புதிய அரசாங்கத்தின் ஒரு பகுதியாக நாகரிக சமூகத்தை ஏற்படுத்த முயலப் போகிறார் எனவும் வலியுறுத்தியுள்ள அவர், தேர்தல் வெற்றிக்கு தனது நன்றிகளையும் கூறியுள்ளார்.

இதனிடையே, தேர்தல் ஆணையத்தின் அனைத்து அதிகாரிகள், சுகாதார அதிகாரிகள், காவல்துறை மற்றும் நாட்டில் அமைதியான தேர்தலை உறுதி செய்வதில் தங்களை ஈடுபடுத்திக் கொண்ட அதிகாரிகள் அனைவருக்கும் அவர் நன்றிகளைத் தெரிவித்தார்.

# தேசியப் பட்டியல் உறுப்பினர்களின் விவரம் 14 ஆம் திகதிக்கு முன் சமர்ப்பிக்கப் பணிப்பு

பொதுத் தேர்தலில் வெற்றி பெற்றுள்ள அனைத்து கட்சியினரதும் தேசியப் பட்டியல் உறுப்பினர்களின் பெயர் விவரங்களை எதிர் வரும் 14 ஆம் திகதிக்கு முன்பாக சமர்ப்பிக்குமாறு அறிவிக்கப்பட்டுள்ளது.

தேசிய தேர்தல்கள் ஆணைக்குழுவினால் வெளியிடப்பட்டுள்ள அறிக்கையிலேயே இந்த விடயம் தெரிவிக்கப்பட்டுள்ளது.

தேசியப் பட்டியல் உறுப்பினர்களின் பெயர் விவரங்கள் கிடைக்கப்பெற்றதன் பின்னர் பொதுத் தேர்தல் தேசியப் பட்டியலை வர்த்தமானியில் வெளியிடுவதற்கு நடவடிக்கை எடுக்கப்படும் எனவும் அறிவிக்கப்பட்டுள்ளது.

இதனிடையே, ஸ்ரீலங்கா பொதுஜன பெரமுனவின் தேசியப் பட்டியல் உறுப்பினர்களின் பெயர் விவரங்கள் தேர்தல்கள் ஆணைக்குழுவிடம் நேற்றுக் கையளிக்கப்பட்டுள்ளன.

இந்த நிலையில் தமது கட்சி தேசியப் பட்டியல் உறுப்பினரின் பெயர் விவரத்தினை விரைவில் வெளியிடுவதற்கு நடவடிக்கை எடுத்துள்ளதாக ஐக்கிய தேசியக் கட்சியின் தகவல்கள் தெரிவிக்கின்றன

# இலங்கைக்கான பயணத்தை மறுபரிசீலனை செய்யுமாறு அமெரிக்கா ஆலோசனை

இலங்கைக்கான பயணத்தை மறுபரிசீலனைசெய்யுமாறு அமெரிக்கா, தமது நாட்டு மக்களுக்கு ஆலோசனை தெரிவித்துள்ளது.

கொரோனா வைரஸ் தொற்று தொடர்பான உலகளாவிய பயண அறிவுறுத்தலில் அமெரிக்க தொற்று நோய் தடுப்புப்பிரிவு இந்த ஆலோசனையை விடுத்துள்ளது.

கொரோனா தொற்று தொடர்பாக அமரிக்க தொற்றுநோய் பிரிவு 4 கட்டங்களை தரமிட்டுள்ளது. அதில் இலங்கை 3ஆம் தரத்தில் பதிவாகியுள்ளது.

சில நாடுகளில் கொரோனா வைரஸ் மற்றும் பாதுகாப்பு நிலைமைகள் மேம்படுவதுடன் ஏனையவற்றில் மோசமடையக்கூடும்.

இதன் அடிப்படையில் அமெரிக்க தொற்றுநோய் தடுப்பு பிரிவு பயண ஆலோசனைகளை மாற்றியமைத்து வருகிறது.

இதேவேளை இலங்கை வீடுகளில் முடக்கநிலை நீக்கப்பட்டுள்ளதாகவும் சில போக்குவரத்து மற்றும் நடவடிக்கைகளை மீண்டும் தொடங்கியுள்ளதாகவும் அமெரிக்க ஆலோசனையில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

# முன்னாள் எம்.பிக்கள் 70 பேர் இம்முறை அவுட்

இம்முறை பொதுத் தேர்தலில் முன்னாள் நாடாளுமன்ற உறுப்பினர்கள் 70க்கும் அதிகமானவர்கள் மக்களினால் நிராகரிப்பட்டுள்ளனர்.

கடந்த நாடாளுமன்றத்தில் ஐக்கிய தேசிய கட்சியை பிரதிநிதித்துவப்படுத்திய 23 பேருக்கும் அதிகமானோர் இம்முறை பொதுத் தேர்தலில் தோல்வியடைந்துள்ளனர்.

ஐக்கிய தேசிய கட்சியின் தலைவரும் முன்னாள் பிரதமருமான ரணில் விக்ரமசிங்க, ரவி கருணாநாயக்க, அகிலவிராஜ் காரியவசம், நவீன் திஸாநாயக்க, வஜிர அபேவர்தன, தயா கமகே, ருவன் விஜேவர்தன, அர்ஜுன ரணதுங்க, அஜித் மான்னப்பெரும, ஹிருணிக்கா பிரேமசந்திர, சுஜீவ சேனசிங்க, அஜித் பீ பெரேரா, பாலித தெவரபெரும, ஏ.எச்.எம். பௌசி, சதுர சேனா ரத்ன, விஜித் விஜேமுனி, எட்வெட் குணசேகர, விஜேபால ஹெட்டிஆராச்சி, பியசேன கமகே, பந்துலால் பண்டாரிகொட, பாலித ரங்கே பண்டார, லக்ஷ்மன் விஜேமான்ன மற்றும் விஜயகலா மகேஸ்வரன் ஆகிய ஐக்கிய தேசிய கட்சியின் முன்னாள் உறுப்பினர்களே இவ்வாறு தோல்வியடைந்துள்ளனர்.

அத்துடன் கடந்த நாடாளுமன்றத்தை பிரதிநிதித்துவப்படுத்திய ஐக்கிய மக்கள் சுதந்திர கட்சியை சேர்ந்த உறுப்பினர்கள் 10 பேருக்கும் அதிகமானோர் இம்முறை தோல்வியடைந்துள்ளனர்.

திலங்க சுமதிபால, லக்ஷ்மன் யாப்பா அபேவர்தன, டீ.பீ.ஏக்கநாயக்க, எஸ்.பீ.நாவின்ன, தாரானாத் பஸ்நாயக்க, லக்ஷ்மன் வசந்தர பெரேரா, இந்திக்க பண்டாரநாயக்க, நிரோன் பிரேமரத்ன மற்றும் துலிப்ப விஜேசேகர ஆகியோர் கடந்த நாடாளுமன்றத்தை பிரதிநிதித்துவம் செய்த போதும் இம்முறை தோல்வி அடைந்துள்ளனர்.

மக்கள் விடுதலை முன்னணியை பிரதிநிதித்துவப்படுத்திய சுனில் ஹந்துன்நெத்தி, வைத் தியர் நலிந்த ஜயசிஸ்ஸ மற்றும் நிஹால் கல்ப் பத்தி ஆகிய முன்னாள் உறுப்பினர்கள் இம் முறை தோல்வியடைந்துள்ளனர்.

தமிழ் தேசிய கூட்டமைப்பின் மாவை சேனா திராஜா மற்றும் மற்றும் ஈ.சரவணபவன், எஸ்.சிவமோகன், சிவசக்தி ஆனந்தன், சாந்தி சிறிஸ் கந்தராசா, சிறிமோகன், யோகேஸ்வரன் ஆகியோரே இவ்வாறு உறுப்பினர் பதவிகளை இழந்துள்ளனர்.

# சஜித் அணி சார்பில் நியமனம் பெறும் ஏழு தேசியப் பட்டியல் உறுப்பினர்கள்

நடந்து முடிந்த நாடாளுமன்றத் தேர்தலில் சஜித் பிரேமதாஸவின் ஐக்கிய மக்கள் சக்தி பெற்றுக்கொண்ட மொத்த வாக்குகளின் அடிப்படையில், அக்கட்சிக்கு 7 தேசியப் பட்டியல் ஆசனங்கள் கிடைக்கப் பெற்றிருந்தன.

அந்தவகையில், ரஞ்சித் மத்தும பண்டார, ஹரீன் பெர்னாண்டோ, இம்தியாஸ் பாகீர் மக்கார், திஸ்ஸ அத்தநாயக்க, எரான் விக்ரமரத்ன, மயந்த திஸாநாயக்க, தயானிகமகே போன்ற வேட்பாளர்கள் தேசியப் பட்டியல் மூலம் நாடாளுமன்றம் செல்ல உள்ளதாக ஐக்கிய மக்கள் சக்தி உத்தியோகபூர்வமாக அறிவித்துள்ளது.

முன்னதாக ஸ்ரீலங்கா பொதுஜன பெரமுன 17 பேர் கொண்ட தேசியப் பட்டியல் உறுப்பினர்களின் பெயர் பட்டியலை தேர்தல் ஆணைக்குழுவிடம் சமர்ப்பித்திருந்தமை குறிப்பிடத்தக்கது.

## இரங்கல் செய்தி



### சின்னராசா இராஜேஸ்வரி

உலகத் தவில் மாமேதை என்று அழைக்கப்படும் இணுவையூரைச் சேர்ந்த அமரர் N.R. சின்னராசா அவர்களின் அன்பு மனைவி சின்னராசா இராஜேஸ்வரி நேற்றுமுன்தினம் இறைவனடி சேர்ந்தார்.

அன்னாரின் பிரிவால் துயருறும் தவில் மாமணிகள் N.R. ரவிந்திரன். N.R.சுதாகரன். N.R. நரேந்திரன். N.R. முரளிதரன் ஆகியோரின் துயரில் நாமும் பங்கு கொள்கிறோம். எம்மையெலாம் இசை உலகில் கேள்வி ஞானத்தினுடாக தெளிவும். அமைதியும் ஏற்பட வைத்த குடும்பம் .இவர்கள் பணி மேலும் சந்ததி சந்ததியாகப் புகழ்பூத்து தொடர்ந்து வருகின்றது. தொடர்ந்தும் எம் இனத்துக்கும் கலாசாரத்துக்கும் பண்பான. கௌரவமான பரம்பரையாக இந்தக் குடும்பத்தை உருவாக்கி வழி நடத்திய இந்த அம்மையாரின் ஆத்மா சொர்க்கத்தில் இருந்தும் அவருடைய புதல்வர்களின் புகழை வாழ்த்தும் என்பதில் ஐயமில்லை.

'இசைக்கு மயங்காதோர் உலகில் உண்டோ?"

காரைநகர்.

எஸ்.மனோகரன்
MANOJ EXPRESS SERVICE



# பொதுத்தேர்தலுக்கு பயன்படுத்தப்பட்ட அனைத்து இடங்களும் தொற்று நீக்கம்

கொழும்பு, ஓக.09

நாடாளுமன்றத் தேர்தல் முடிவடைந்த நிலையில், தேர் தலுக்காகப் பயன்படுத்தப்பட்ட அனைத்துஇடங்களும்தொற்று நீக்கம் செய்யப்பட்டுள்ளது எனச் சுகாதார அமைச்சு தெரி வித்துள்ளது.

பாடசாலைகள், அரச அலு வலகங்கள்உள்ளிட்டஅனைத்து வாக்களிப்பு நிலையங்கள் மற் றும் வாக்கெண்ணும் நிலை யங்களாகப் பயன்படுத்தப் பட்ட அனைத்து இடங்களும் தொற்று நீக்கம் செய்யப்பட் டுள்ளனஎனச்சுகாதாரஅமைச் சின் பேச்சாளர் அறிவித்துள் ளார்.

பிரதேச சுகாதார வைத்திய அதிகாரிகளினதும் பொதுச் சுகாதார பரிசோதகர்களினதும் கண்காணிப்பின் கீழ், முப்ப டையினரின் உதவியுடன் தொற்றுநீக்கம் மேற்கொள் ளப்பட்டுள்ளது.

இதேவேளை, பாடசாலை கள் ஆரம்பிக்கப்படுவதற்கு முன்னராக பாடசாலைகளி லும் டெங்கு ஒழிப்பு நடவடிக் கைகள் முன்னெடுக்கப்பட வுள்ளன என்று சுகாதார அமைச்சு தெரிவித்துள்ளது.

# ரத்ன தேரர் - ஞானசாரர் இடையே கடும் முறுகல்



## தேசியப் பட்டியல் ஆசனம் பெறுவதில்

கொழும்பு, ஓக. 09

அபேஜன பல கட்சியின் ஊடாகக் கிடைத்த தேசியப் பட்டியல் ஆசனத்தைப் பகிர்ந்து கொள்வதில் ஞானசார தேரருக்கும் அத்துரலிய ரத்னதேரருக்கும் இடையே முரண்பாடு ஏற்பட்டுள்ளதாக பொது பல சேனா தகவல்கள் தெரிவிக்கின்றன.

குருநாகல் மாவட்டத்தில் அந்தக் கட்சியின் ஊடாக ஞானசார தேரர் போட்டியிட முயன்றபோதும் வேட்பு மனு நிராகரிக்கப்பட்டிருந்தது.

அபே ஜன பல கட்சியின் தலைவராக அத்துரலிய ரத்ன தேரர் இருக்கிறார். தேசியப் பட்டியல் ஆச னத்தை யாருக்கு வழங்கு வது என்பதில் ஞானசார தேரரின் தரப்பும் அத்துரலிய ரத்ன தேரரின் தரப்பும் முரண் பட்டுள்ளன.

ஐக்கிய தேசியக் கட்சியும், அபே ஜன பல கட்சியும் தேர் தலில் தலா ஒரு தேசியப் பட் டியல் ஆசனத்தை மாத்திரம் பெற்றுள்ளமை குறிப்பிடத்தக்கது.

# தந்தை - மகன் மூன்று ஜோடிகள் நாடாளுமன்றுக்கு

பொதுத்தேர்தலில் மூன்று தந்தை யரும் அவர்களின் மூன்று மகன்களும் வெற்றி பெற்று நாடாளுமன்றுக்கு தெரி வாகியுள்ளனர்.

குருநாகல் மாவட்டத்தில் இருந்து பிர தமர் மஹிந்த ராஜபக்ஷவும், அம்பாந் தோட்டை மாவட்டத்தில் இருந்து அவரது மகன் நாமல் ராஜபக்ஷவும் தெரிவு செய் யப்பட்டுள்ளார்கள்.

முன்னாள் அமைச்சர் சமல் ராஜபக்ஷ அம்பாந்தோட்டையில் இருந்தும், அவ ரது மகன் சஷிந்திர ராஜபக்ஷ மொனராக லவில் இருந்தும் தெரிவாகியுளனர்.

முன்னாள் அமைச்சர் ஜனக பண்டார தென்னக்கோனும், அவரது மகன் பிரமித தென்னக்கோனும், மாத்தளையில் இருந்து தெரிவு செய்யப்பட்டுள்ளார்கள். இவர்கள் அனைவரும் ஸ்ரீ லங்கா பொதுஜன பெர முனவின் சார்பில் மொட்டு சின்னத்தில் தேர்தலில் போட்டியிட்டவர்களாவர்.

# 33 வருடங்களின் பின் எம்.பிக்களாக புத்தளத்தில் இருந்து இருவர் தெரிவு

கொழும்பு, ஓக.09

நடந்து முடிந்த நாடாளு மன்றப் பொதுத்தேர் தலில் 33 வருடங்களுக்குப் பின்னர் புத்தளம் தேர்தல் தொகுதியிலி ருந்து இரு நாடாளுமன்ற உறுப்பினர்கள் தெரிவு செய் யப்பட்டுள்ளனர்.

1989 ஆம் ஆண்டுக்குப் பின்னர் புத்தளம் தொகுதியி லிருந்து சிறுபான்மை மற்றும் பெரும்பான்மை மக்களை பிர திநிதித்துவப்படுத்தும் வகை யில் நாடாளுமன்ற உறுப்பி னர்கள் இதுவரையும் தெரிவு செய்யப்படவில்லை.

இந்த நிலையில் நடை பெற்று முடிந்த நாடாளுமன் றப் பொதுத் தேர்தலில் ஸ்ரீலங்கா பொதுஜன பெர முன சார்பில் புத்தளம் மாவட் டத்தில் போட்டியிட்ட சிந்தக்க அமல் மாயாதுன்ன 46,058 விருப்பு வாக்குகளையும், அகில இலங்கை மக்கள் காங் கிரஸ் சார்பில் முஸ்லிம் தேசி யக் கூட்டணி தராசு சின்னத் தில் போட்டியிட்ட அலிசப்ரி ரஹீம் 33, 509 விருப்பு வாக் குகளையும் பெற்று 33 வரு டங்களுக்குப் பின் னர் புத்த ளம் தொகுதியிலிருந்து இம் முறை நாடாளுமன்றத்திற்கு தெரிவு செய்யப்பட்டுள்ளனர்.

முன்னாள் நிதி அமைச்ச ரான பரீஷ்டர் நெய்னா மரிக் கார், புத்தளம் மாவட்டத்தின் புத்தளம் தேர்தல் தொகுதியின் நாடாளுமன்ற உறுப்பினராக இறு தியாகத் தெரிவு செய்யப் பட்டிருந்தார் என்பது குறிப் பிடத்தக்கது.

# காலம் தாழ்த்தாமல் மக்களுக்கான சேவையை உடன் துரிதப்படுத்துக!



## அநுரகுமார வேண்டுகோள்

நாடாளுமன்றத் தேர்தலில் பெரும்பான்மை ஆதரவை மக்கள் வழங்கியுள்ளமையினால் ஜனாதி பதியும் பிரதமரும் காலம் தாழ்த்தாது மக்களுக்கான சேவைகளை துரிதப்படுத்த வேண்டும்.

– இவ்வாறு தேசிய மக்கள் சக்தியின் தலைவர் அநுரகுமார திஸாநாயக்க தெரிவித்தார்.

அவர் மேலும் தெரிவித்ததாவது:–

நிறைவடைந்த பொதுத்தேர்தலில் தேசிய மக் கள் சக்திக்கு சுமார் 04 இலட்சத்து 40 ஆயிரம் வாக்குகள் கிடைக்கப் பெற்றுள்ளன. எனவே, எமக்கு வாக்களித்த மக்களுக்கு நன்றி தெரிவித்துக் கொள்கின்றோம். ஆனாலும் கடந்த ஜனாதிபதித் தேர்தலுடன் மதிப்பிடுகையில் வாக்குகளின் எண் ணிக்கை அதிகரித்துள்ள போதிலும் கடந்த 2015 ஆண்டை விட இம்முறை உறுப்பினர்களின் எண் ணிக்கை குறைவடைந்துள்ளது.

இதேவேளை, புதிய அரசு பொறுப்பேற்ற முதல் மக்களுக்கான அபிவிருத்தி உள்ளிட்ட முக்கிய விடயங்களை மேற்கொள்வதற்கு மூன்றில் இரண்டு பெரும்பான்மை அவசியம் எனக் கூறி யுள்ளது.

இந்தநிலையில் பொதுத் தேர்தலின் ஊடாக மக்கள் அதற்கான ஆணையை வழங்கியுள்ளனர்.

எனவே, எதிர்வரும் காலங்களிலும் காரணங் களைக் கூறிக் கொண்டிருக்காமல் மக்களுக்கான சேவையை ஜனாதிபதியும் பிரதமரும் துரிதப்படுத்த வேண்டும் – என்றார்.

# தேசியப்பட்டியல் ஆசனத்துக்கு ஐ.தே.கட்சியில் இருவர் மோதல்

ஐக்கிய தேசிய கட்சிக்கு, தேசிய பட்டியலில் கிடைத்த ஒரே ஒரு உறுப்பினர் பதவிக்காக கட்சியை சேர்ந்த முன்னாள் அமைச்சர்கள் இருவர் மோதிக் கொள்கின்றனர் எனத் தகவல் வெளியாகி உள்ளது.

இம்முறைகொழும்புமாவட்டத்தில்போட்டியிட்ட இந்த இரண்டு பிரபலங்களும் தங்களுக்கு உறுப்பினர் பதவியை வழங்குமாறு கட்சித் தலைவர் ரணில் விக்ரமசிங்கவுக்கு அழுத்தம் பிரயோகித்துள்ளனர் எனத் தகவல் வெளியாகியுள்ளது

தோல்வியடைந்த வேட்பாளர்கள் எவரும் நாடாளுமன்றத்திற்கு செல்வதற்கு தேசிய பட்டிய லில் வாய்ப்பு வழங்கப்படாதென ஐக்கிய தேசியக் கட்சியின் தேர்தல் கொள்கையில் குறிப்பிடப் பட்டுள்ளது.

தேசியப்பட்டியல் தனக்கானதென ரணில் தனக்கு நெருக்கமானவரிடம் குறிப்பிட்டுள்ளார். அதற்க மைய தேசிய பட்டியலில் ரணில் நாடாளுமன்றத் திற்கு செல்வதற்கு அதிக வாய்ப்புகள் உள்ளதாகக் கொழும்பு வட்டாரங்கள் சில தெரிவித்தன.

# மஹிந்த ராஜபக்ஷவின் வெற்றிக்கு பல சர்வதேச ஊடகங்கள் பாராட்டு

கொழும்பு, ஓக.09

பொதுத் தேர்தலில் பிரதமர் மஹிந்த ராஜபக்ஷ விற்கு கிடைத்த வெற்றியை சர்வதேச ஊடகங்கள் பாராட்டி எழுதியுள்ளன.

சில ஊடகங்கள் இந்த வெற்றியை ராஜபக்ஷவின் சுனாமி என வர்ணித்துள்ளன. இது குறித்து விரிவான வகையில் தத்தமது ஊடகங்களில் முக்கிய இடமளித்து எழுதியுள்ளன.

ஜனாதிபதி கோட்டாபய ராஜபக்ஷவும், பிரதமர் மஹிந்த ராஜபக்ஷவும் ஸ்ரீலங்கா பொதுஜன பெர முனவை அமோக வெற்றியை நோக்கி வழிநடத்தி யுள்ளார்கள் என அந்த ஊடகங்கள் குறிப்பிட்டுள் ளன.

கடந்த காலத்தில் சர்ச்சைக்குரிய கட்டுரைகளை எழுதிய நியுயோர்க் ரைம்சின் மரியா அல் அப் என்ற கட்டுரையாளர், இலங்கை அரசாங்கம் ஏற் படுத்திய ஸ்திரத்தன்மையை பொதுத் தேர்தலில் மக்கள் அங் கீகரித்துள்ளதாகக் குறிப்பிட்டுள்ளார்.

பிபிசி, சி.என்.என், அல் – ஜசீரா, நியூயோர்க் ரைம்ஸ், வோஷிங்டன் போஸ்ட், பீப்பல்ஸ் டெய்லி, ரஷ்யா ருடே முதலான செய்தி நிறுவனங்களும் இலங் கையின் தேர்தல் குறித்து செய்திகளை வெளியிட்டுள் ளன.

இந்தியாவின் நியுஸ் எயிட்டீன் இணையத்தளம் எழுதிய விமர்சனத்தில், தாமரை மொட்டின் மூலம் யானையொன்று வீழ்த்தப்பட்டுள்ளதாக குறிப்பிட்டுள் ளது. இந்தியாவின் த ஹிந்து, ரைம்ஸ் ஒவ் இந்தியா, என்.டி.ரிவி, ஹிந்துஸ்தான் ரைம்ஸ் முதலான பல ஊடகங்கள் இலங்கையின் பொதுத் தேர்தல் பற்றி விரிவான விமர்சனங்களை எழுதி யுள்ளன. இலங்கை மக்கள் வலுவான தலைமைத்துவத்திற்கும், நிலை யான அரசாங்கத்திற்குமாக வாக்களித்துள்ளார்கள் என அவை குறிப்பிட்டுள்ளன.

பாகம் - 01

பஞ்சாட்சரம் ஜோன் டிலக்சன்

# 2020 பொதுத்தேர்தல் முடிவுகள் ஒருபார்வை

## கட்சிகளுக்கு கிடைத்த ஆசனங்களின் விபரங்கள்

கொரோனா நிலைமைக்குள் மாட்டிக் கொண்ட இலங்கை சனநாயக சோசலிச குடியரசின் 9வது நாடாளுமன்னத் தேர்தல் வெற்றிகரமான முறையில் நடைபெற்று முடிந்துவிட்டது. நடைபெற்ற பொதுத் தேர்தலில் ஸ்ரீலங்கா பொதுஜன பெரமுன அதிகளவான வாக்குகளை பெற்று வெற்றி பெற்றுள்ளது. நாடளாவிய ரீதியில் 68,53,693 வாக்குகளை ஸ்ரீலங்கா பொதுஜன பெரமுன பெற்றுக் கொண்டது. இம் முறை நடைபெற்ற பொதுத் தேர்தலில் ஸ்ரீலங்கா பொதுஜன பெரமுனவுக்கு மாவட்டத் தேர்தல் மூலமாக 128 ஆசனங்களும் தேசிய பட்டியல் மூலம் 17 ஆசனங்களுமாக மொத்தம் 145 ஆசனங்கள் கிடைத்துள்ளன. நடைபெற்று முடிந்த பொதுத் தேர்தலில் ஸ்ரீலங்கா பொதுஜன பெரமுன 59.89 வீத வாக்குகளைப் பெற்றுள்ளது குறிப்பிடத்தக்கது. பெரும்பாலான அனைத்து தொகுதிகளிலும் ஸ்ரீலங்கா பொதுஜன பெரமுன வெற்றி பெற்றுள்ளது.

இரண்டாவது இடத்தில் ஐக்கிய மக்கள் சக்தி உள்ளது. ஐக்கிய மக்கள் சக்திக்கு 27,71,984 வாக்குகள் கிடைத்துள்ளன. 23.90 வீத வாக்குகள் அளிக்கப்பட்டுள்ளன. மாவட்டத் தேர்தலின் மூலமாக 47 ஆசனங்களும், தேசிய பட்டியல் மூலமாக 7 ஆசனங்களுமாக மொத்தம் 54 ஆசனங்களை ஐக்கிய மக்கள் சக்தி கைப்பற்றியுள்ளது. மூன்றாவது இடத்தில் இலங்கை தமிழரசு கட்சி உள்ளது. இம்முறை பொதுத் தேர்தலில் 3,27,168 வாக்குகளை பெற்றுள்ளது. 2.82 வீத வாக்குகளை பெற்றுள்ள இலங்கை தமிழரசு கட்சிக்கு மாவட்டத் தேர்தல் மூலம் 9 ஆசனங்களும், தேசிய பட்டியல் மூலம் 1 ஆசனத்தையும் பெற்று மொத்தமாக 10 ஆசனங்களைக் கைப்பற்றியுள்ளது. அதேபோன்று தேசிய மக்கள் சக்தி (ஜே.வி.பி. அணி) 4,45,958 வாக்குகளை பெற்றுள்ளது. இது 3.84 வீதமாகும். இக்கட்சி தேர்தல் மூலம் 2 ஆசனங்களையும், தேசிய பட்டியல் மூலம் ஓர் ஆசனமுமாக மொத்தம் 3 ஆசனங்களைக் கைப்பற்றியது.

அகில இலங்கை தமிழ் காங்கிரஸ் 67,766 (0.58 வீதம்) வாக்குகளைப் பெற்றுள்ளது. தேர்தல் மற்றும் தேசிய பட்டியலில் ஒவ்வொரு ஆசனங்களையும் பெற்று மொத்தம் 2 ஆசனங்களைக் கைப்பற்றியது. இதேபோன்று ஈழ மக்கள் ஜனநாயக கட்சி இம்முறை 61,464 (0.53 வீதம்) வாக்குகள் கிடைத்துள்ளன. ஈழ மக்கள் ஜனநாயக கட்சிக்கு இம்முறை தேர்தலில் இரண்டு ஆசனங்களைக் தன்வசப்படுத்திக் கொண்டது. தேசிய பட்டியலில் ஆசனங்கள் இக்கட்சிக்கு கிடைக்கவில்லை.

ஸ்ரீலங்கா சுதந்திர கட்சிக்கு இம்முறை ஒரு ஆசனம் கிடைத்துள்ளது. இக்கட்சி நடைபெற்று முடிந்த பொதுத் தேர்தலில் 66,579 (0.57 வீதம்) வாக்குகளை பெற்றுக் கொண்டது. வரலாற்றில் இல்லாத அளவிற்கு இலங்கை சுதந்திரமடைந்த பின்னர், 4 தசாப்தங்களுக்கும் மேலாக நாட்டின் ஆட்சி அதிகாரத்தை கொண்டிருந்த ஐக்கிய தேசிய கட்சிக்கு மாவட்ட ரீதியில் இம்முறை எந்தவொரு ஆசனமும் கிடைக்கவில்லை. இம்முறை பொதுத் தேர்தலில், நாடளாவிய ரீதியில் 2,49,435 (2.15 வீதம்) வாக்குகளையே ஐக்கிய தேசிய கட்சி பெற்றுக் கொண்டது. ஐக்கிய தேசிய கட்சியின் தலைவர் ரணில் விக்ரமசிங்க மற்றும் கட்சியின் உப தலைவர் ரவி கருணாநாயக்க ஆகியோர் கொழும்பு மாவட்டத்தில் களமிறங்கியமையுடன், அவர்களும் தமது ஆசனங்களை இழந்தனர். எனினும் ஐக்கிய தேசிய கட்சிக்கு இம்முறை தேசிய பட்டியலில் ஒரு ஆசனம் வழங்கப்படவுள்ளது ஆறுதல் பரிசு போலவே அனைவராலும் பார்க்கப்படுகின்றது. இதேபோன்ற ஆறுதல் பரிசு ஒன்றை 'எங்கள் மக்கள் சக்தி' (ஓபிபிபி) கட்சிக்கு 67,758 (0.58 வீதம்) வாக்குகளைப் பெற்றதால் தேசிய பட்டியலில் ஒரு ஆசனம் கிடைத்தது.

தமிழ் மக்கள் விடுதலை புலிகள் கட்சி 67,692 (0.58 வீதம்) வாக்குகளையும், முஸ்லிம் தேசிய கூட்டணி 55,981 (0.48 வீதம்) வாக்குகளையும், தமிழ் மக்கள் தேசிய கூட்டணி 51,301 (0.44 வீதம்) வாக்குகளையும், அகில இலங்கை மக்கள் காங்கிரஸ் 43,319 (0.37வீதம்) வாக்குகளையும், தேசிய காங்கிரஸ் 39,272 (0.34வீதம்) வாக்குகளையும், ஸ்ரீலங்கா முஸ்லிம் காங்கிரஸ் 34,428 (0.30வீதம்) வாக்குகளையும் பெற்றுக் கொண்டதால் இக் கட்சிகள் தலா ஓர் ஆசனத்தை சுவீகரித்துக்கொண்டது எனலாம். இந்த கட்சிகளுக்கிடையில்தான் 225 ஆசனங்களும் பகிரப்பட்டன. மாகாண அடிப்படையல் மாவட்ட ரீதியில் ஒவ்வொரு கட்சிகளும் பெற்றுக்கொண்ட ஆசனங்களை நோக்கலாம்.

### வட மாகாணம் - 13 ஆசனங்கள்

யாழ்ப்பாணம் தேர்தல் மாவட்டத்தில் இலங்கைத் தமிழரசுக் கட்சி 1,12,967 வாக்குகளை பெற்று 3 ஆசனங்களை கைப்பற்றியுள்ளது. அகில இலங்கை தமிழ் காங்கிரஸ் 55,303 வாக்குகளையும், ஸ்ரீலங்கா சுதந்திர கட்சி 49,373 வாக்குகளையும், ஈழ மக்கள் ஜனநாயக கூட்டணி 45,797 வாக்குகளையும், தமிழ் மக்கள் தேசிய கூட்டணி 35,927 வாக்குகளையும் பெற்று தலா ஓர் ஆசனத்தை சுவீகரித்துள்ளது. மிகவும் முக்கியமாக குறிப்பிட வேண்டிய விடயம் இம் முறை நுவரெலியா, வன்னி, யாழ். தேர்தல் மாவட்டங்களில் போட்டியிட்ட ஸ்ரீலங்கா சுதந்திர கட்சிக்கு யாழ். மாவட்டத்தில் மாத்திரம் ஓர் ஆசனம் கிடைத்துள்ளது.



வன்னி தேர்தல் மாவட்டத்தில் இலங்கை தமிழரசு கட்சி வெற்றி பெற்றது. 69,916 வாக்குகளைப் பெற்ற இலங்கை தமிழரசுக் கட்சி 3 ஆசனங்களை தனதாக்கிக் கொண்டது. ஸ்ரீலங்கா பொதுஜன பெரமுன 42,524 வாக்குகளையும், ஐக்கிய மக்கள் சக்தி 37,883 வாக்குகளையும், ஈழ மக்கள் ஜனநாயகக்கட்சி 11,310 வாக்குகளையும் பெற்று தலா ஓர் ஆசனத்தை கைப்பற்றியுள்ளன.

### கிழக்கு மாகாணம் - 16 ஆசனங்கள்

திருகோணமலை மாவட்டத்தில் ஐக்கிய மக்கள் சக்தி 86,394 வாக்குகளை பெற்று 2 ஆசனங்களை கைப்பற்றியுள்ளது. ஸ்ரீலங்கா பொதுஜன பெரமுன 68,681 வாக்குகளை பெற்று ஒரு ஆசனத்தையும், இலங்கை தமிழரசுக் கட்சி 39,570 வாக்குகளை பெற்று ஓர் ஆசனத்தையும் கைப்பற்றியுள்ளன.

மட்டக்களப்பு மாவட்டத்தில் இலங்கை தமிழரசுக் கட்சி 79,460 வாக்குகளை பெற்று 2 ஆசனங்களை கைப்பற்றியுள்ளது. தமிழ் மக்கள் விடுதலை புலிகள் 67,692 வாக்குகளையும், ஸ்ரீலங்கா முஸ்லிம் காங்கிரஸ் 34,428 வாக்குகளையும், ஸ்ரீலங்கா பொதுஜன பெரமுன 33,424 வாக்குகளை பெற்று, தலா ஓர் ஆசனத்தை கைப்பற்றியுள்ளன.

திகாமடுல்ல மாவட்டத்தில் (அம்பாறை) ஸ்ரீலங்கா பொதுஜன பெரமுன 126,012 வாக்குகளை பெற்று 3 ஆசனங்களையும், ஐக்கிய மக்கள் சக்தி 102,274 வாக்குகளை பெற்று 2 ஆசனங்களை கைப்பற்றியுள்ளதுடன், அகில இலங்கை மக்கள் காங்கிரஸ் 43,319 வாக்குகளைப் பெற்று ஓர் ஆசனத்தையும், தேசிய காங்கிரஸ் 38,911 வாக்குகளைப் பெற்று ஒரு ஆசனத்தை கைப்பற்றியுள்ளது.

### மேல் மாகாணம் - 47 ஆசனங்கள்

கொழும்பு மாவட்டத்தில் ஸ்ரீலங்கா பொதுஜன பெரமுன 6,74,603 வாக்குகளை பெற்றுக் கொண்டு 12 ஆசனங்களை கைப்பற்றியுள்ளதுடன், ஐக்கிய மக்கள் சக்தி 3,87,145 வாக்குகளை பெற்று 6 ஆசனங்களை கைப்பற்றியுள்ளது. தேசிய மக்கள் சக்தி 67,600 வாக்குகளைப் பெற்று ஒரு ஆசனத்தைக் கைப்பற்றியது. ஐக்கிய தேசிய கட்சி 30,875 வாக்குகளையும் பெற்றது. இலங்கை வரலாற்றில் ஐக்கிய தேசிய கட்சியின் கோட்டையாக திகழ்ந்த கொழும்பு மாவட்டத்தில் இம் முறை ஒரு ஆசனமும் கைப்பற்றப்படவில்லை. இம் முறை பொதுத் தேர்தலில் கொழும்பு மாவட்டத்தில் ஐக்கிய தேசிய கட்சிக்கு 30,875 வாக்குகள் மாத்திரமே கிடைத்தன.

கம்பஹா மாவட்டத்தில் ஸ்ரீலங்கா பொதுஜன பெரமுன 8,06,896 வாக்குகளை பெற்று 13 ஆசனங்களை கைப்பற்றியுள்ளது. ஐக்கிய மக்கள் சக்தி 2,85,809 வாக்குகளை பெற்று 4 ஆசனங்களையும், தேசிய மக்கள் சக்தி 61,733 வாக்குகளை பெற்று ஒரு ஆசனத்தை பெற்றுக் கொண்டதுடன் ஐக்கிய தேசிய கட்சி, 28,282 வாக்குகளை பெற்றது.

களுத்துறை மாவட்டத்தில் ஸ்ரீலங்கா பொதுஜன பெரமுன 4,48,699 வாக்குகளை பெற்று 8 ஆசனங்களையும், ஐக்கிய மக்கள் சக்தி 1,71,988 வாக்குகளை பெற்று 2 ஆசனங்களையும் தன்வசப்படுத்தியது. தேசிய மக்கள் சக்தி 33,434 வாக்குகளைப் பெற்றுக் கொண்டதுடன், ஐக்கிய தேசிய கட்சி, 16,485 வாக்குகளை பெற்றது.

### வடமேல் மாகாணம் - 23 ஆசனங்கள்

புத்தளம் மாவட்டத்தில் ஸ்ரீலங்கா பொதுஜன பெரமுன 220,566 வாக்குகளைப் பெற்று 5 ஆசனங்களைக் கைப்பற்றியுள்ளது. ஐக்கிய மக்கள் சக்தி 80,183 ஆசனங்களை பெற்று 2 ஆசனங்களை கைப்பற்றியது. இம்முறை பொதுத்தேர்தலில் முஸ்லிம் தேசிய கூட்டணி 55,981 வாக்குகளை பெற்று ஒரு ஆசனத்தை சுவீகரித்தது. புத்தளம் தேர்தல் மாவட்டத்தில், ஐக்கிய தேசிய கட்சிக்கு 7,985 வாக்குகள் கிடைத்தன.

குருநாகல் தேர்தல் மாவட்டத்தில் ஸ்ரீலங்கா பொதுஜன பெரமுன வெற்றி பெற்றது. குருநாகல் மாவட்டத்தில் 6,49,965 வாக்குகளை பெற்றுக் கொண்ட ஸ்ரீலங்கா பொதுஜன பெரமுன 11 ஆசனங்களை கைப்பற்றியுள்ளது. 2,44,860 வாக்குகளை கைப்பற்றிய ஐக்கிய மக்கள் சக்தி 4 ஆசனங்களை கைப்பற்றியது. இத்தோடு தேசிய மக்கள் சக்தி 36,290 வாக்குகளையும், ஐக்கிய தேசிய கட்சி 26,770 வாக்குகளையும் பெற்றுக் கொண்டன.

### மத்திய மாகாணம் - 25 ஆசனங்கள்

கண்டி தேர்தல் மாவட்டத்தில் ஸ்ரீலங்கா பொதுஜன பெரமுன 4,77,446 வாக்குகளைப் பெற்றுக் கொண்டு 8 ஆசனங்களை கைப்பற்றியது. ஐக்கிய மக்கள் சக்தி 2,34,523 வாக்குகளை பெற்றுக் கொண்டதுடன் 4 ஆசனங்களை கைப்பற்றியது. கண்டி மாவட்டத்தில் 19,12 வாக்குகளை ஐக்கிய தேசிய கட்சி பெற்றுக் கொண்டது.

மாத்தளை மாவட்டத்திலும் ஸ்ரீலங்கா பொதுஜன பெரமுன வெற்றியீட்டியது. 1,88,779 வாக்குகளை பெற்ற ஸ்ரீலங்கா பொதுஜன பெரமுன 4 ஆசனங்களை கைப்பற்றியது. ஐக்கிய மக்கள் சக்தி 73,955 வாக்குகளைப் பெற்று ஒரு ஆசனத்தை கைப்பற்றியதுடன், தேசிய மக்கள் சக்தி 7,542 வாக்குகளை பெற்றுக் கொண்டதுடன், ஐக்கிய தேசிய கட்சி 6,592 வாக்குகளை பெற்றது.

நுவரெலியா தேர்தல் மாவட்டத்திலும் ஸ்ரீலங்கா பொதுஜன பெரமுனவின் வெற்றி உறுதி செய்யப்பட்டது. ஸ்ரீலங்கா பொதுஜன பெரமுன 2,30, 389 வாக்குகளை பெற்று 5 ஆசனங்களை கைப்பற்றியது. 1,32,008 வாக்குகளை பெற்ற ஐக்கிய மக்கள் சக்தி, 3 ஆசனங்களை கைப்பற்றியது. ஐக்கிய தேசிய கட்சி 12,974 வாக்குகளை பெற்றதுடன், ஸ்ரீலங்கா சுதந்திர கட்சி 6,227 வாக்குகளை பெற்றது.

### சப்பிரகமுவ மாகாணம் - 20 ஆசனங்கள்

இரத்தினபுரி மாவட்டத்தின் வெற்றியும் ஸ்ரீலங்கா பொதுஜனபெரமுனவசமானது. இரத்தினபுரி மாவட்டத்தில் ஸ்ரீலங்கா பொதுஜன பெரமுன 4,46,668 வாக்குகளை பெற்று 8 ஆசனங்களை தனதாக்கிக் கொண்டது. 1,55,159 வாக்குகளை பெற்ற ஐக்கிய மக்கள் சக்திக்கு 3 ஆசனங்கள் கிடைத்துள்ளன. இரத்தினபுரி மாவட்டத்தில், தேசிய மக்கள் சக்திக்கு இம்முறை 17,611 வாக்குகளும் ஐக் கிய தேசிய கட்சிக்கு 12,349 வாக்குகளும் பதிவாகி யுள்ளன.

கேகாலை மாவட்டத்தில் ஸ்ரீலங்கா பொதுஜன பெரமுன 3,31,573 வாக்குகளை பெற்று 7 ஆசனங்களை தனதாக்கிக் கொண்டது. 1,31,317 வாக்குகளை பெற்ற ஐக்கிய மக்கள் சக்திக்கு 2 ஆசனங்கள் கிடைத்துள்ளன. கேகாலை மாவட்டத்தில், தேசிய மக்கள் சக்திக்கு இம்முறை 14,033 வாக்குகளும்

(11 ஆம் பக்கம் பார்க்க..)

காலைக்கதிர் Kalaikkathir

## சகலரும் ஒருமித்து வழங்கினால்

# தமிழரசின் தலைமையை பொறுப்பேற்க நான் தயார்!

### சிறிதரன் அதிரடி அறிவிப்பு



கிளிநொச்சி, ஓக. 08

இலங்கைத் தமிழரசுக் கட்சியின் தலைமைப் பொறுப்பை அனைவருமாக இணைந்து வழங்கினால் ஏற்கத் தயார்.

– இவ்வாறு தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் சார்பில் யாழ்ப்பாணம் – கிளிநொச்சி தேர்தல் மாவட்டத்திலிருந்து நாடாளுமன்றத்துக்குத் தெரிவாகியுள்ள சிவஞானம் சிறிதரன் தெரிவித்தார்.

கிளிநொச்சியில் அமைந்துள்ள தமிழரசுக் கட்சியின் அலுவலகத்தில் இன்று நடைபெற்ற ஊடகவியலாளர் சந்திப்பின்போது ஊடகவியலாளர் ஒருவர் எழுப்பிய கேள்விக்குப் பதிலளிக்கும்போதே அவர் மேற்கண்டவாறு கூறினார்.

அவர் மேலும் தெரிவித்ததாவது:–

தமிழரசுக் கட்சியின் தலைமைப் பொறுப்பு ஏற்பது தொடர்பில் எனக்குத் தனிப்பட்ட ஆசை ஏதும் கிடையாது. இன்னுமொரு தலைமையைத் தூக்கி எறிந்துவிட்டு அந்த இடத்தில் நான் இருக்க வேண்டும் என்ற எண்ணமும் எனக்கு இல்லை.

தமிழரசுக் கட்சியில் மாற்றம் ஒன்று ஏற்படுத்தப்பட வேண்டும். அது உடனடியாக ஏற்படுத்த வேண்டிய தேவை இல்லை. தேர்தல் முடிவுகளை வைத்து தலைமைகளை மாற்ற வேண்டும் எனக் கூறுவது பொருத்தமற்றது.

தமிழரசுக் கட்சியில் இளம் இரத்தம் பாய்ச்சப்பட வேண்டும். மாற்றங்கள் ஏற்படுத்தப்பட வேண்டும். அதற்காக எனக்கு தலைமைப் பதவி கிடைக்க வேண்டும் என்ற எண்ணம் கிடையாது. அனைத்து உறுப்பினர்களும், மக்களும் இணைந்து ஒருமித்துக் கோரினால் அந்தத் தலைமையை ஏற்க நான் தயாராகவே உள்ளேன்.

அனைவரினதும் சம்மதத்துடனேயே அன்றி, இன்னொருவரது பதவியைப் பறித்து அதில் அமர வேண்டும் என்ற எண்ணம் எனக்கு இல்லை – என்றார்.

## நல்லை ஆதினத்திடம் ஆசி பெற்றார் சிறிதரன்



யாழ்ப்பாணம், ஓக. 08

நடைபெற்ற நாடாளுமன்றத் தேர்தலில் வெற்றி பெற்ற பின்னர் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் நாடாளுமன்ற உறுப்பினர் சி.சிறிதரன் சமயத் தலைவர்களிடம் ஆசி பெற்று வருகிறார்.

இன்று காலை நல்லூரில் அமைந்துள்ள நல்லை ஆதீனத்தில் குரு முதல்வரைச் சந்தித்து ஆசி பெற்றதுடன் நல்லைக் கந்தன் ஆலயத்திலும் வழிபாட்டில் ஈடுபட்டார்.

## தேசியப் பட்டியல் கஜேந்திரனுக்கு!

யாழ்ப்பாணம், ஓக 08

தமிழ்த் தேசிய மக்கள் முன்னணியின் தேசியப்பட்டியல் ஆசனத்தைக் கட்சியின் செயலாளர் செ.கஜேந்திரனுக்கு வழங்குவதென முடிவாகியுள்ளது.

கட்சியின் மத்தியகுழு நேற்று முன் தினம் இரவு மூடிய அறைக்குள் நடத்திய மந்திராலோசனையின் பின்னர் இந்த முடிவு எடுக்கப்பட்டது.

கட்சியின் மத்தியகுழுவில் 5 பேர் அங்கம் வகிப்பது குறிப்பிடத்தக்கது.

# தமிழ்க் கூட்டமைப்பின் தோல்விக்கு தமிழரசின் வாக்குச் சரிவே காரணம்!

### சிறிதரன் பகிரங்க குற்றச்சாட்டு

கிளிநொச்சி, ஓக. 08

தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் தோல்விக்கு தமிழரசுக் கட்சியின் வாக்கு சரிவே காரணம்.

– இவ்வாறு தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் சார்பில் யாழ்ப்பாணம் – கிளிநொச்சி தேர்தல் மாவட்டத்திலிருந்து நாடாளுமன்றத்துக்குத் தெரிவாகியுள்ள சிவஞானம் சிறிதரன் தெரிவித்தார்.

கிளிநொச்சியில் அமைந்துள்ள தமிழரசுக் கட்சியின் அலுவலகத்தில் இன்று நடைபெற்ற ஊடகவியலாளர் சந்திப்பின்போது ஊடகவியலாளர் ஒருவர் எழுப்பிய கேள்விக்குப் பதிலளிக்கும்போதே அவர் மேற்கண்டவாறு கூறினார்.

அவர் மேலும் தெரிவித்ததாவது:–

தமிழ்த் தேசியக் கூட்டமைப்பில் பங்காளிக் கட்சிகளின் ஆசனங்கள் அதிகரித்துள்ள நிலையில் தமிழரசுக் கட்சியின் ஆசனங்கள் குறைந்துள்ளமை உண்மைதான்.

தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் வாக்குச் சரிவுக்குத் தமிழரசுக் கட்சியின் வாக்குச் சரிவே காரணம் என்பதை ஏற்றுக் கொள்கின்றேன்.

சில வெளிநாட்டு ஊடகங்களின் பொய்ப் பிரசாரங்கள் மற்றும் உள் கட்சியில் காணப்பட்ட பிரசாரங்கள் காரணமாக தமிழரசுக் கட்சியின் வாக்கில் சரிவு ஏற்பட்டுள்ளது. அதனால் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் வாக்குகள் சரிந்துள்ளன.

சிங்களக் கட்சிகள் தொடர்பில் விமர்சனங்களை முன்வைக்காமல் தனியே தமிழ்த் தேசியக் கூட்டமைப்பையும் அதிலும் தமிழரசுக் கட்சியையும் விமர்சித்தார்கள். சில ஊடகங்களும் அதையே செய்தது. இவ்வாறான நிலையிலேயே இந்த வாக்குச் சரிவு தமிழரசுக் கட்சிக்கு ஏற்பட்டது. அதனை நாம் ஏற்றுக்கொள்ளத்தான் வேண்டும் – என்றார்.

'கடந்த தேர்தலோடு ஒப்பிடுகையில் இந்தத் தேர்தலில் சிவஞானம் சிறிதரனது விருப்பு வாக்கில் சரி பாதிக்கு மேல் குறைந்துள்ளது. இதற்கு என்ன காரணம் என்று நினைக்கின்றீர்கள்?' என ஊடகவியலாளர் வினவியபோது,

கடந்த பொதுத் தேர்தலில் தமிழ்த் தேசியக் கூட்டமைப்புக்குக் கிடைத்த வாக்குகள் 2 இலட்சத்துக்கு மேலானது. இம்முறை ஒரு இலட்சத்துக்கும் சற்று அதிகமானது. எனவேவே விருப்பு வாக்கில் சரிவு ஏற்பட்டுள்ளது. இந்தத் தேர்தலில் தமிழரசுக் கட்சியை இலக்கு வைத்தே பிரசாரம் முன்னெடுக்கப்பட்டது. அதிலும் குறிப்பாக என்னை இலக்கு வைத்து பிரசாரம் முன்னெடுக்கப்பட்டது.

கிளிநொச்சியில் ஒரு சுயேச்சைக் குழுவைச் சேர்ந்தவருக்கு ஆதரவாக மேடையில் ஏறிப் பேசியவர் பொய்யான குற்றச்சாட்டுக்களை முன்வைத்திருந்தார். அதுபோன்று ஆதாரமற்ற குற்றச்சாட்டுக்கள் பல முன்வைக்கப்பட்டன. சில வெளிநாட்டு ஊடகங்கள் இவ்வாறு ஆதாரமற்ற குற்றச்சாட்டை முன்வைத்தனர். சொத்துக்கள் இருக்கின்றன எனவும், அரசுடன் தொடர்பு இருக்கின்றது எனவும் பல குற்றச்சாட்டுக்கள் முன்வைக்கப்பட்டமையும் இதற்கு ஒரு காரணமாக அமைந்துள்ளது.

அதேவேளை, மக்களுக்கும் என் மீதான விமர்சனங்கள் இருந்திருக்கலாம். எமது கட்சியில் போட்டியிட்டவர்களும் என் மீது பல்வேறு விமர்சனங்களையும் சேறு பூசும் செயற்பாடுகளையும் முன்னெடுத்திருந்தனர். இவ்வாறான நிலையிலேயே வாக்குச் சரிவு ஏற்பட்டுள்ளது – என்று பதிலளித்தார்.

# இலங்கையில் அடக்குமுறை அதிகரிக்கலாம்!

### மனித உரிமை கண்காணிப்பகம் எச்சரிக்கை

கொழும்பு, ஓக. 08

இலங்கையில் எதிர்வரும் காலங்களில் அடக்குமுறைகள் அதிகரிக்கப்படலாமென சர்வதேச மனித உரிமைகள் கண்காணிப்பகம் தெரிவித்துள்ளது.

பொதுத்தேர்தலைத் தொடர்ந்து இலங்கையின் நிலைமைகள் தொடர்பாக சர்வதேச மனித உரிமை கண்காணிப்பகம் இவ்வாறு கூறியுள்ளது.

அது மேலும் குறிப்பிடுகையில் –

அரசின் கொள்கைகளுக்கு எதிராக முரண்படுபவர்களுக்கு எதிரான அடக்குமுறைகள் அதிகரிக்கப்படலாம்.

மனித உரிமை ஆர்வலர்கள், பத்திரிகையாளர்கள் சட்டத்தரணிகள் மற்றும் அரசின் கொள்கைகளுக்கு சவால் விடுபவர்களுக்கு எதிராக அரசு அச்சத்தை ஏற்படுத்தும் அச்சுறுத்தும் நடவடிக்கைகளை முன்னெடுத்துள்ளது.

அண்மைகாலமாக ஜனாதிபதி கோட்டபய ராஜபக்ஷ அரசின் ஒடுக்குமுறை நடவடிக்கைகள் தீவிரமடைந்துள்ளன – என்று குறிப்பிட்டுள்ளது.

# ஓக. 14 ஆம் திகதிக்கு முன் அமைச்சரவை பதவியேற்பு

கொழும்பு, ஓக. 08

புதிய நாடாளுமன்ற உறுப்பினர்களைக் கொண்ட வர்த்தமானி அறிவிப்பைத் தேசிய தேர்தல் ஆணைக்குழு வெளியிட்டால், புதிய அமைச்சரவை எதிர்வரும் வெள்ளிக்கிழமைக்கு முன்னர் பதவியேற்கவாய்ப்புள்ளது.

பதவியேற்பு திகதி, தேர்தல் ஆணைக்குழுவின் இறுதி வர்த்தமானி அறிவிப்பு வெளியிடுவதைப் பொறுத்தது என்று சிறிலங்கா பொதுஜன பெரமுனவின் பொதுச் செயலாளர் சாகர கரியவாசம் தெரிவித்தார்.

அரசமைப்பில் குறிப்பிடப்பட்டுள்ளபடி அமைச்சரவை அமைச்சர்களை 30 ஆகக் கட்டுப்படுத்த கட்சி விரும்புகிறது. பதவியேற்பு விழா வரலாற்று சிறப்புமிக்க மாகுல் மடுவா அல்லது கண்டியில் உள்ள றோயல் மண்டபத்தில் நடைபெற வாய்ப்புள்ளது.

நாட்டின் பிரதமராக சிறிலங்கா பொதுஜன பெரமுனவின் தலைவர் மஹிந்த ராஜபக்ச, நான்காவது முறையாக நாளை பதவியேற்பார்.

இந்த மாதம் 20 ஆம் திகதி புதிய நாடாளுமன்றம் கூட்டப்படவுள்ளது.

# தேசியப் பட்டியல் ஆசனம் தோற்றவர்களுக்கு இல்லை

### சஜித் பிரேமதாஸ திட்டவட்டம்



கொழும்பு, ஓக. 09

தேர்தலில் தோல்வியடைந்த எந்தவொரு வேட்பாளருக்கும் தேசியப்பட்டியல் ஊடாக நியமனம் வழங்கப்படமாட்டாது என்று ஐக்கிய மக்கள் சக்தியின் தலைவர் சஜித் பிரேமதாஸ தெரிவித்தார்.

அத்துடன், தற்போது நாட்டில் பாரிய அரசியல் ஜனநாயகப் புரட்சி ஆரம்பிக்கப்பட்டுள்ளது என்றும் அவர் குறிப்பிட்டுள்ளார்.

கொழும்பில் அமைந்துள்ள கட்சியின் தலைமைக் காரியாலயத்தில் இன்று இடம்பெற்ற விசேட ஊடக சந்திப்பிலேயே அவர் இவ்வாறு குறிப்பிட்டார்.

அவர் மேலும் கூறுகையில் –

நாடாளுமன்றில் 54 ஆசனங்களைப் பெற்றுக் கொடுத்த 27 இலட்சத்துக்கும் அதிகமான மக்களுக்கு நன்றி தெரிவிக்க விரும்புகிறேன். தேசியப் பட்டியல் தொடர்பான கலந்துரையாடல் தொடர்ந்தும் முன்னெடுக்கப்படுகின்றது.

தேர்தலில் பின்னடைவைச் சந்தித்தவர்களுக்கு தேசியப் பட்டியலில் வாய்ப்பு வழங்கப் போவதில்லை எனக் கட்சியின் கொள்கைப் பிரகடனத்தில் முன்னரே அறிவிக்கப்பட்டது. இந்நிலையில், மக்களின் விருப்பமும் அதுவாகவே உள்ளது. எனவே, பொதுத் தேர்தலில் தோல்வியடைந்தவர்களுக்கு தேசியப் பட்டியலில் வாய்ப்பளிக்கப்படாது.

இதேவேளை, தற்போது நாட்டில் பாரிய அரசியல் ஜனநாயகப் புரட்சி ஆரம்பிக்கப்பட்டுள்ளது – என்றார்.

# மன்னார் மறைக்கல்வி ஆணைக்குழுவிற்கான புதிய கட்டடத்திற்கு மன்னார் ஆயர் அடிக்கல்





ஒகஸ்ட் 03, 2020 அன்று மன்னார் மறைமாவட்ட மறைக்கல்வி மற்றும் திருவிவிலியம் ஆணைக்குழுவின் புனித வளனார் மறைக்கல்வி நிலையத்திற்கான புதிய இரண்டு மாடிக் கட்டடத் தொகுதி அமைப்பதற்கான அடிக்கல் நாட்டும் நிகழ்வு மன்னார் ஆயர் மேதகு கலாநிதி இம்மனுவேல் பர்ணாண்டோ ஆண்டகை தலைமையில் மன்னார் மறைமாவட்ட மறைக்கல்வி ஆணைக்குழு இயக்குனர் அந்தோனிதாஸ் டலிமா அடிகளாரின் ஏற்பாட்டில் நடைபெற்றபோது எடுக்கப்பட்ட படத்தைக் காலைக்கதிர் கிறிஸ்தவ அன்பு நெஞ்சங்களின் பார்வைக்குத் தருகிறோம்.

## ஹிரோசிமா - 75 ஆம் ஆண்டு நினைவுக்கு திருத்தந்தை பிரான்சிஸ் விசேட செய்தி

அணுகுண்டு தாக்குதலின் 75 ஆம் ஆண்டு நினைவைக் கடைப்பிடிக்கும் ஹிரோசிமா நகர மக்களுக்கு, குறிப்பாக இந்தத் தாக்குதலிலிருந்து தப்பித்து இன்றுவரை வாழும் கபாகுசா என்றறியப்படும் குழுவினருக்கு என் இதயம் நிறைந்த வணக்கங்களைத் தெரிவித்துக் கொள்கிறேன் என்று திருத்தந்தை பிரான்சிஸ் அவர்கள் ஒரு செய்தியின் வழியே கூறியுள்ளார்.

1945ம் ஆண்டு ஒகஸ்ட் 06ஆம் திகதி ஹிரோசிமா நகரின் மீது அமெரிக்க ஐக்கிய நாடு மேற்கொண்ட அணுகுண்டுத் தாக்குதலையடுத்து இவ்வாண்டு அந்நகரில் கடைப்பிடிக்கப்படும் 75ஆம் ஆண்டு நினைவு நிகழ்வுகளில் பங்கேற்போருக்கென தன் வணக்கத்தைக் கூறியுள்ள திருத்தந்தை இச்செய்தியை ஹிரோசிமா ஆளுநருக்கு அனுப்பியுள்ளார்.

சென்ற ஆண்டு நவம்பர் மாதத்தில் ஜப்பான் நாட்டுக்குத் திருத்தூதுப் பயணம் மேற்கொண்ட வேளையில் ஹிரோசிமா, நாகசாகி ஆகிய இரு நகரங்களிலும் அமைந்துள்ள அமைதி நினைவிடங்களில் தான் செலவிட்ட நேரங்களை இச்செய்தியின் தொடக்கத்தில் திருத்தந்தை நினைவு கூர்ந்துள்ளார்.

## யாழ் – மன்னார் மறைமாவட்டங்களில் பணியாற்றி

# மறைந்த இறைபணியாளர்களின் வரலாற்றுப் பதிவு நூல் வெளியீடு

யாழ் – மன்னார் மறைமாவட்டங்களில் பணியாற்றி மறைந்த இறைப்பணியாளர்களின் வரலாற்றுப்பதிவுகளை உள்ளடக்கிய ஆங்கில நூல் 27 ஜூலை 2020 அன்று பாதுகாவலன் மண்டபத்தில் வெளியிடப்பட்டது.

யாழ் – மன்னார் மறைமாவட்டங்களில் பணியாற்றி இறையடி சேர்ந்த 60 மறைப்பணியாளர்களின் வாழ்கை வரலாற்று பதிவுகள் வெவ்வேறு குருக்களால் எழுதப்பட்டு ஞா. விக்ரர் பிலேந்திரன் அடிகளாரால் தொகுக்கப்பட்டு வெளியிடப்பட்டது.

இந்நிகழ்வின் பிரதம விருந்தினராக யாழ் ஆயர் மேதகு கலாநிதி யஸ்ரின் பேணாட் ஞானப்பிரகாசம் ஆண்டகையும் சிறப்பு விருந்தினராக மன்னார் மறைவட்ட ஆயர் மேதகு கலாநிதி இம்மானுவேல் பெர்னான்டோ ஆண்டகையும் கலந்து கொண்டனர்.



யாழ். மறைமாவட்ட குருக்கள் ஒன்றியத்தின் தலைவர் அ.பெ. பெனற் அடிகளாரின் தலைமையில் நடைபெற்ற இந்நிகழ்வில் யாழ்., மன்னார் மறைமாவட்ட குருக்களும் மறைந்த குருக்களின் பெற்றோர் சகோதரர்கள் எனப்பலரும் கலந்து கொண்டனர்.

காலைக்கதிர் Kalaikathir
கிறிஸ்தவ செய்தி இதழ்
TCNL
உண்மையை எடுத்துரைப்பதே என் பணி – யோவா:18:37
ஆசிரியர் : அருள்திரு ரூபன் மரியாம்பிள்ளை - ஊடக விரிவுரையாளர்

## அசிசியின் மன்னிப்பைப் பெறுவதற்கு அனைவருக்கும் திருத்தந்தை அழைப்பு

*02 ஒகஸ்ட் 2020 அன்று வத்திக்கான் புனித பேதுரு பெருங்கோவில் வளாகத்தில் கூடியிருந்த மக்களுக்கு மூவேளை செப உரையாற்றியபின் அசிசியின் மன்னிப்பு நிகழ்வு குறித்து எடுத்துரைத்தார் திருத்தந்தை பிரான்சிஸ்.*

*இத்தாலியின் அசிசி நகர் புனித பிரான்சிஸ் அவர்களுக்கு இயேசுவால் வழங்கப்பட்ட அசிசியின் மன்னிப்பு எனப்படும், பரிபூரண பலன் என்ற வரத்தை, கத்தோலிக்கர் பெறுவதற்கு திருத்தந்தை ஊக்கப்படுத்தினார்.*

*இந்த பரிபூரண பலனை ஒகஸ்ட் முதல் திகதி மாலையிலிருந்து ஒகஸ்ட் 2ஆம் திகதி நள்ளிரவு வரை பெறலாம் என்றுரைத்த திருத்தந்தை இந்தப் பலனை இறந்தோருக்காகவும் கூடப் பெறலாம் என்றும் கூறினார். ஒப்புரவு மற்றும் நற்கருணை அருளடையாளங்களில் பங்குபெற்று ஒரு பங்கு ஆலயத்தை அல்லது ஒரு பிரான்சிஸ்கன் ஆலயத்தை தரிசித்து, விசுவாச அறிக்கை, ஆண்டவர் கற்றுத்தந்த செபம் ஆகியவற்றை திருத்தந்தைக்காகவும் அவரின் கருத்துக்களுக்காவும் செபிப்பதன் வழியாக பரிபூரண பலனைப் பெறலாம் என்று திருத்தந்தை விளக்கிக் கூறினார்.*

*நம்மிலும், நம்மைச் சுற்றிலும், விண்ணகத்தை உருவாக்கும் கடவுளின் மன்னிப்பை எப்போதும் பெறுவது மிகவும் முக்கியமானது என்றும் திருத்தந்தை எடுத்துரைத்தார். 2016ஆம் ஆண்டு, இந்த சிறப்பு காட்சியின் 8ஆம் நூற்றாண்டு நிறைவு என்பதாலும் அவ்வாண்டு இரக்கத்தின் சிறப்பு யூபிலி நடைபெற்றதாலும் திருத்தந்தை பிரான்சிஸ் அவர்கள், இந்தச் சிற்றாலயத்திற்கு ஒகஸ்ட் 4ஆம் திகதி சென்று செபித்தார் என்பது குறிப்பிடத்தக்கது.*

## ‘கொவிட் – 19’நெருக்கடி சமயத்தில் திருத்தந்தை ஆற்றிய மறையுரைகள் நூலாக்கம் பெறுகின்றன



இத்தாலியில்கொவிட்–19கொள்ளைநோய் பரவலால் கடுமையான கட்டுப்பாட்டு விதிமுறைகள் நடைமுறையில் இருந்த காலக்கட்டத்தில் திருத்தந்தை பிரான்சிஸ் அவர்கள் வத்திக்கான் சாந்தா மார்த்தா இல்லத்தின் சிற்றாலயத்தில் ஆற்றிய மறையுரைகளை ஒரு நூலாக வெளியிட்டுள்ளது வத்திக்கான்.

கடந்த மார்ச் 9 ஆம் திகதியிலிருந்து மே மாதம் 18 ஆம் திகதி வரை உரோம் நேரம் காலை ஏழு மணிக்கு சாந்தா மார்த்தா இல்லத் தின் சிற்றாலயத்தில் திருத்தந்தை பிரான்சிஸ் அவர்கள் நிறைவேற்றிய திருப்பலிகளில் ஒவ்வொரு நாளும் ஒரு கருத்துக்காகச் செபிக்க விண்ணப்பித்தார். மற்றும் மறையுரைகளும் ஆற்றினார். ‘நெருக்கடி காலத்தில் உறுதியாயிருத்தல்’ என்ற தலைப்பில், வத்திக்கான் பதிப்பகம் வெளியிட்டுள்ள இந்நூலில் திருத்தந்தை பிரான்சிஸ் அவர்கள் ஆற்றிய மறையுரைகள் இறைவேண்டல்கள் மற்றும் ஏனைய செய்திகள் தொகுத்து வழங்கப்பட்டுள்ளன. இந்நூல் இணைய பக்கத்தில் பல்வேறு மொழிகளில் பீ.டி.எவ். அமைப்பிலும் வெளியிடப்பட்டுள்ளது. இதனை யாரும் எளிதில் வாசிக்கலாம். ஆனால் நகல் எடுப்பதற்கு, வத்திக்கான் வெளியீட்டு நிறுவனத்திடம் முறைப்படி விண்ணப்பம் செய்திருக்கவேண்டும் எனக் கூறப்பட்டுள்ளது.

இந்நூல் குறித்து வத்திக்கான் வெளியீட்டு நிறுவனத்தின் இயக்குனர் அவர்கள் வத்திக்கான் செய்தித்துறையிடம் கூறுகையில் –

இத்தாலியில் கொள்ளைநோய் கட்டுப்பாட்டு விதிமுறைகள் கடைப்பிடிக்கப்பட்டு வந்த காலக்கட்டத்தில் திருத்தந்தை பிரான்சிஸ் அவர்கள் ஒரு தந்தையாக – ஓர் ஆன்மீக வழிகாட்டியாக – நம்மோடு தொடர்ந்து பயணித்தார் என்று கூறினார்.

திருத்தந்தையின் மறையுரைகள் விலை மதிப்பற்றவை என்றும் வாழ்வுபற்றி அவர் கூறிய அழகிய வார்த்தைகளால் நாம் தொடர்ந்து ஊட்டம்பெற நம்மை அனுமதிக்க வேண்டும் என்றும் அவர் மேலும் கூறினார்.

இத்தாலியில் கொரோனா கொள்ளைநோய்ப் பரவல் தொடர்பாகக் கடுமையான கட்டுப்பாடுகள் விதிக்கப்பட்டிருந்த பத்து வாரங்களில், திருத்தந்தை நிறைவேற்றிய திருப்பலிகள் யூடியூப் வழியாகவும் நேரடியாகவும் ஒளிபரப்பப்பட்டன. ஒவ்வொரு நாளும் திருப்பலிக்குப்பின் ஏறத்தாழ பத்து நிமிடங்கள் திருநற்கருணை ஆராதனையும் நடைபெற்றது.

காலைக்கதிர் Kalaikkathir

# வடக்கில் தனிக்காட்டு ராஜாவாக இருந்த

# கூட்டமைப்பின் படுவீழ்ச்சிக்கு காரணம் என்ன?

ந.லோகதயாளன்

நடந்து முடிந்த நாடாளுமன்றத் தேர்தல் மூலம் பல உண்மைகளை ஏற்க வேண்டிய தேவையை மக்கள் தெளிவாக வெளிக்காட்டியுள்ளனர். அந்தத் தீர்ப்பை ஏற்று பல கட்சிகள் தம்மை சீர்செய்தே ஆக வேண்டும் என்பதையும் மக்கள் எடுத்துக்காட்டியுள்ள



னர். குறிப்பாக தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் புனரமைப்பும் கட்டமைப்பும் சீரமைக்கப்பட வேண்டும் என்பது மிக மிக முக்கியமானது.

2004ஆம் ஆண்டில் நடைபெற்ற நாடாளுமன்றத் தேர்தலில் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு 22 ஆசனங்களைப் பெற்றிருந்தது. ஆனால், அதன் பின்புள்ள சட்ட திருத்தங்கள், ஆவண நடைமுறைகளின்பால் வடக்கு, கிழக்கில் தமிழ்த் தேசியத்தின்பால் எக்காரணம் கொண்டும் 22 ஆசனங்களைப் பெறுவது கடினம் என்பதும் உண்மை . ஏனெனில் 2004ஆம் ஆண்டு யாழ்ப்பாணம் மாவட்டத்துக்கு 9 ஆசனங்கள் இருந்த நிலையில் தற்போது 7 ஆசணங்களே உள்ளன. எதிர்காலத்தில் அது 6 ஆகக் குறைவடையவும் சந்தர்ப்பம் உள்ளது.

இந்தநிலையில், 2015ஆம் ஆண்டு 16 நாடாளுமன்ற உறுப்பினர்களைக் கொண்டிருந்த கூட்டமைப்பு தற்போது 10 நாடாளுமன்ற உறுப்பினர்களாக வந்



தமை நிச்சயமாக பாரிய வீழ்ச்சியாகவே பார்க்கப்பட வேண்டியது. குறிப்பாக யாழ்ப்பாணம், மட்டக்களப்பில் கூட்டமைப்புக்கான ஆசனங்கள் படுமோசமாக இழக்கப்பட்டுள்ளன. திருகோணமலையிலும் 196 வாக்குகளினாலேயே அந்த ஓர் ஆசனமும் தப்பிப் பிழைத்துள்ளது. அதேவேளை, அம்பாறையில் ஏற்கனவே கிடைக்கும் ஓர் ஆசனம் பறிபோயும் உள்ளது.

இவற்றை வாக்கு எண்ணிக்கையில் பார்த்தால் 2015இல் 5 இலட்சத்தைத் தாண்டிய வாக்கு எண்ணிக்கை 2020இல் 3 இலட்சத்துடன் வந்து நிற்கின்றது. அதாவது 2 லட்சம் வாக்குகள் வீழ்ச்சி கண்டதாகவே கருதப்படுகின்றது.

இதுமட்டுமன்றி இம்முறை நாடாளுமன்றத் தேர்தலில் போட்டியிட்ட தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் பிரதான பங்காளிக் கட்சியான இலங்கைத் தமிழரசுக் கட்சியின் தலைவர், பொதுச்செயலாளர் இருவரும் தோல்வி கண்டமையும் ஆராயப்பட வேண்டியதாகவே உள்ளது.

இப்போது கூட்டமைப்பின் தோல்விகளுக்குப் பல காரணங்கள் கூறப்படுகின்றன. அவற்றில் பிரதான காரணங்களாகத் தமிழரசுக் கட்சியின் அத்திவாரம் முழுமையாக முதுமை கண்டுள்ளமை பிரதான காரணம். இவ்வாறு முதுமை கண்ட தலைமைகள் எந்த விடயத்தைக் கொண்டு சென்றாலும் பார்ப்போம், பேசுவோம் என்பது மட்டுமே பதிலாக அமைவது முக்கிய காரணமாக இன்று திறந்த வெளியிலேயே பேசப்படுகின்றது.

நாடாளுமன்றத் தேர்தலில் போட்டியிடும் வேட்பாளர்களைத் தெரிவு செய்ய அமைத்த குழுவில் இருந்தே தவறு அமைந்து விட்டது என்பதை ஏற்றேயாக வேண்டும். வேட்பாளர்கள் எவருமே தெரிவுக்குழுவில் அங்கம் வகித்திருக்கக் கூடாது.

இதேநேரம் தமிழரசுக் கட்சியில் சிறந்த ஆற்றல் உள்ள ஒருவரே கூட்டமைப்பின் பேச்சாளராக உள்ளார் என்பதில் மாற்றுக் கருத்துக்கு இடமிருக்க முடியாது.

தமிழ் மக்களின் பிரச்சினையை சிங்கள மக்களையும் ஏற்க வைக்க வேண்டும் என்பதில் அவர் உறுதியாகவுள்ளார். சிங்கள மக்களுக்கு உண்மையைக் கூறுவதோடு அதனை மென்மையாகக் கூற வேண்டும் என்பதிலும் அவர் திடமாகவுள்ளார்.

எனினும், அவர் தமிழ் மக்களின் தியாகத்தின் வலியைத் தவிர்த்து உரைப்பது தமிழ் மக்கள் மனதில் ஆறாத வடுவாகவே பார்க்கப்படுகின்றது.

தமது தலைவர்களாகக் கடும்போக்கு உறுப்பினர்கள் 150 பேரைத் தேர்ந்தெடுத்துள்ள சிங்கள மக்களிடம் அந்த 150 உறுப்பினர்களின் கூற்று எடுபடுமேயன்றி தமது எதிர் இனமாகப் பார்க்கப்படும் இனத்தின் பிரதிநிதிகளான கூட்டமைப்பினரின் கூற்றை ஏற்கவோ, கருணை கொள்ளவோ மாட்டார்கள். மாறாக அது செய்தியாக சில நாள் விமர்சனத்துக்கு மட்டுமே பயன்படும். அதனால் கூட்டமைப்பின் பேச்சாளர் சிலதை பேசாமல் விடுவதே மேலானது அல்லது கட்சிக்கு சிறந்தது என்பதும் நிரூபணம் செய்யப்பட்டுவிட்டது.

இவரின் வாக்கு வங்கி வீழ்ச்சியடையும் நிலையில் அதனைத் தனக்குச் சாதகமாகப் பயன்படுத்த முற்பட்ட சக வேட்பாளர் ஒருவரே ஊதி , ஊதி பலூனுக்கு காற்றடித்த போன்ற செயற்பாடு அவரது பலூனை உடைய வைத்தமையே மிச்சமாகியது. அவரது ஊதுகுழலினாலும் வாக்கு வங்கி வீழ்ச்சி கண்டது என்ற உண்மையையும் ஏற்கத்தான் வேண்டும். அதாவது 2010ஆம் ஆண்டு என்ன காரணத்துக்காகக் கூட்டமைப்பின் பட்டியலில் சந்தர்ப்பம் வழங்கப்பட்டதோ அதே மூல காரணம் கூட்டமைப்பின் பாரிய வீழ்ச்சிக்கும் காரணமாக அமைய இந்த வேட்பாளரே காரணமானார்.

இந்தக் கருத்துக்கு அவரின் ஊடகம் மறுப்புக் கூறுகின்றபோது எமது எல்லை வடக்குக்கு உட்பட்டது, கிழக்கின் தோல்விக்கும் நாமா காரணம் எனக் கேட்பது கேவலமானது.

வடக்கிலே பரவுவது கிழக்குக்குப் போகாது எனக் கூறுவது ஒட்டுமொத்த ஊடகத்தையும் கேலிக்கூத்தாகக் கருதும் செயலாகும். அதனை நேரடியாக சிறு கூற்றில் கூறுவதானால் யாழில் இருந்து வெளிவரும் அத்தனை பத்திரிகைகளும் வடக்கு மக்களின் கரத்துக்கு சென்றடைய முன்னர் இலங்கை முழுவதும் சென்றடையக் கூடிய இலத்திரனியல் ஊடகங்கள் , தொலைக்காட்சிகள் ஊடாகக் காலை 8 மணிக்கு முன்பே எடுத்துச் செல்லப்பட்டு விடும் என்பதைக்கூட அறியாதவராகவா அந்த ஊடகப் போராளி உள்ளார்?



இதே வரிசையில் கூட்டமைப்பிலே போட்டியிடும் வேட்பாளர்களும் மேலும் ஒரு சில உறுப்பினர்கள் மட்டுமே கட்சியின் வளர்ச்சிக்காகப் பாடுபட்டனரே அன்றி எஞ்சியோர் ஏதோ இதற்கும் தமக்கும் தொடர்பில்லை என்ற போக்கில் செயற்பட்டனர். அதுமட்டுமன்றி தமது குடும்ப உறவுகள்கூட வாக்களிக்கச் செல்லாமல் இருந்த நிலையில் அவர்களையேனும் வாக்களிக்க ஊக்குவிக்கவில்லை என்ற நிலையில் இவர்கள் எவ்வாறு கட்சி ஆதரவாளர்களை வாக்களிக்கத் தூண்டியிருப்பர் என்ற கேள்வி எழுந்துள்ளது. இது தொடர்பில் உள்ளூராட்சி சபை உறுப்பினர்கள் மற்றும் தொண்டர்களிடம் வினாவினால் வேட்பாளர்களையும் தொகுதிகளையும் ஒதுக்கும்போது எம்மைக் கேட்டா இடம்பெற்றது என்கின்றனர்.

இத்தனை விடயங்களுக்கும் அப்பால் யாழ்பாணம் மாவட்டத்திலும் சரி, வன்னி மாவட்டத்திலும் சரி ஒட்டுமொத்த வேட்பாளர்களையும் வாக்காளர்கள் அல்ல ஊடகவியலாளர்கள் கூட இரு தடவைகளே சந்தித்தனர். அதாவது வேட்புமனு ஒப்பமிடும்போதும் அதன் பின்பு தேர்தல் விஞ்ஞாபன வெளியீட்டின் போதும் மட்டுமே கண்டனர். இறுதி நாள்களில் ஒட்டுமொத்த வேட்பாளர்களும் ஒரே மேடையில் வந்தாலும் அவர்கள் ஒன்றாகக் கைகோர்த்து நிற்கவே இல்லை. இந்த



விடயம் தலைமையின் தவறாகவே பார்க்கப்படுகின்றது.

அத்தோடு கூட்டமைப்பின் தலைவர் இரா. சம்பந்தன் யாழ்ப்பாணம் வந்தவேளை இரு கூட்டங்கள் யாழில் இடம்பெற்றன. அந்தக் கூட்டங்களை நகரை அண்டியோ அல்லது மையப் பகுதிகளிலோ அன்றி ஒதுக்குப் புறங்களில் தயார்படுத்தினாலும் பருத்தித்துறையில் ஓரளவு மக்கள் கூடியபோதும் காங்கேசன் துறைத் தொகுதியில் கூடிய கூட்டம் மக்களைக் காணமுடியவில்லை. ஏனெனில் அவ்வாறு கூட்டம் இடம்பெற்றது கட்சியில் இருந்த பலருக்கே தெரியாது.

இவ்வாறே உடுப்பிட்டி சிங்கம் என போற்றப்பட்டவரின் தொகுதிக்குப் பொறுப்பாக நியமிக்கப்பட்டவரை உடுப்பிட்டியில் இருந்தவர்களுக்கே தெரியாத நிலையே இருந்துள்ளது. அதேவேளை, ஊர்காவற்றுறைத் தொகுதிக்கு நியமிக்கப்பட்டவர் தேர்தல் காலத்தில் எத்தனை நாள்கள் ஊர்காவற்றுறைக்கு வந்தார்? அதன் காரணமாகவே மாறி வாக்களித்தோம் என அந்த மக்கள் கூறுவதிலும் ஓர் உண்மை இருக்கத்தான் செய்கின்றது.

கிளிநொச்சி தொகுதியிலே ஒருவர் மட்டும் தனித்துச் செயற்பட முனைகின்றார். அங்கே வீழ்ச்சி அடைந்தாலும் அவர் பொறுப்பேற்பாரா என்றவர்கள், அவர் எப்படி இயங்கி இருப்பினும் இப்படி வாக்கெடுத்து கட்சியின் மானத்தைக் காத்தமை போன்று மற்றவர்கள் செயற்படவில்லை என்பதையும் ஏற்கத்தான் வேண்டும்.

கட்சியின் தொண்டர்கள் தனித் தனி தலைவர்களின் பின்னால் மட்டும் செயற்படும் நிலைமையே காணப்பட்டது.

இந்தநிலையில் இலங்கைத் தமிழரசுக் கட்சி – தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு இருக்குமானால் இந்த நாடாளுமன்றத்தில் மட்டுமல்ல அடுத்து வரக்கூடிய மாகாண சபையிலும் மேலும் பாரிய வீழ்ச்சி ஏற்படும்.

2018ஆம் ஆண்டு நடைபெற்ற உள்ளூராட்சி சபைத் தேர்தலில் ஏற்பட்ட வீழ்ச்சியை சரிசெய்திருந்தால் 2020 இல் இந்த நிலைமை ஏற்பட்டிருக்காது தவிர்த்திருக்கலாம். இனியாவது சீர்செய்யவில்லையாயின் வடக்கு மாகாண சபையில் 2013 தனிக்காட்டு ராஜாவாக இருந்த தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு கிழக்கு மாகாண சபை அல்லது தற்போதைய உள்ளூராட்சி சபைகள் போன்று தொங்கு நிலைக்குச் செல்லும். எனவே, அதற்கு முன்னர் பாரிய மாற்றங்களை மேற்கொண்டே ஆக வேண்டியது கட்டாயம். அல்லது ஒவ்வொரு தேர்தலின் பின்பும் ஆய்வுக் கட்டுரைகள் மட்டுமே எழுத முடியும்.

# 19 ஆவது திருத்தத்தை நீக்குவதற்குத் தயார்!

## மொட்டுக் கட்சி அறிவிப்பு

கொழும்பு, ஓக.09

19 ஆவது திருத்தத்தை அவசியமான தருணத்தில் நீக்குவதற்கு பொதுஜன பெரமுன தயாராகவுள்ளது என கொழும்பு மாவட்டத்தில் அதிகவாக்குகளை பெற்ற மொட்டுக் கட்சியின் சரத் வீரசேகர தெரிவித்துள்ளார்.

கொழும்பில் இடம்பெற்ற செய்தியாளர் மாநாட்டில் அவர் இதனை தெரிவித்துள்ளார்.

19 ஆவது திருத்தத்தின் மூலம் உருவாக்கப்பட்ட சுயாதீன ஆணைக் குழுக்கள் காரணமாக சுயாதீன நிலைமை ஏற்பட்டுள்ளதா? இந்த ஆணைக்குழுக்கள் அரசதுறை ஊழியர்களின் நடவடிக்கைகளை முடக்கும் நடவடிக்கையை மாத்திரம் செய்துள்ளன.

இந்தஆணைக்குழுக்களால்ஜனாதிபதியின் அதிகாரம் பறிபோயுள்ளது. 19 ஆவது திருத்தத்தின் மோசமான விளைவுகளை நாங்கள் இன்னமும் எதிர்கொள்கின்றோம், இந்த திருத்தம் நாட்டின் பல துறைகளில் அது குழப்பத்தை ஏற்படுத்தியுள்ளது என அவர் மேலும் தெரிவித்துள்ளார்.

# 7 லட்சத்து 44 ஆயிரம் வாக்குகள் நிராகரிப்பு

*இலங்கையில் நடைபெற்று முடிந்த பொதுத்தேர்தலில் 7 லட்சத்து 44 ஆயிரத்து 373 வாக்குகள் (4.58%) நிராகரிக்கப்பட்டுள்ளன.*

*22 தேர்தல் மாவட்டங்களில் இருந்தும் ஒரு கோடியே 62 லட்சத்து 63 ஆயிரத்து 885 பேர் வாக்களிப்பதற்கு தகுதிபெற்றிருந்தாலும் ஒரு கோடியே 23 லட்சத்து 43 ஆயிரத்து 302 பேரே (75.89%) வாக்குரிமையைப் பயன்படுத்தினர். 24.11 வீதமானோர் வாக்களிக்கவில்லை.*

*2019 ஜூலை மாத வாக்காளர் பட்டியலே தேர்தலுக்கு பயன்படுத்தப்பட்டதால் வாக்காளர்களில் சிலர் மரணித்திருக்கலாம், பலர் வெளிநாடுகளில் தொழில் புரிகின்றனர். மறுபுறத்தில் கொரோனா பிரச்சினை வேறு. எனவே, 75 வீதமான வாக்கு பதிவு வர வேற்ககூடிய விடயமாகும்.*

*ஆனாலும், வாக்களிப்பு தொடர்பில் எவ்வளவுதான் தெளிவூட்டல்கள் வழங்கப்பட்டாலும் நிராகரிக்கப்படுகின்ற வாக்குகளின் எண்ணிக்கை அதிகரித்துகொண்டுதான் இருக்கின்றது*

# 2020 பொதுத்தேர்தல்...

**(07 ஆம் பக்கத் தொடர்ச்சி)**

ஐக்கிய தேசிய கட்சிக்கு 12,168 வாக்குகளும் பதிவாகியுள்ளன.

**ஊவா மாகாணம் - 15 ஆசனங்கள்**

பதுளை மாவட்டத்திலும் ஸ்ரீலங்கா பொதுஜன பெரமுன வெற்றியை தனதாக்கிக் கொண்டது. ஸ்ரீலங்கா பொதுஜன பெரமுன 3,09,538 வாக்குகளை பெற்று 6 ஆசனங்களை கைப்பற் றியுள்ளது. ஐக்கிய மக்கள் சக்தி 1,44, 290 வாக்குகளை பெற்று 3 ஆசனங்களை தனதாக்கிக் கொண்டது. பதுளை மாவட்டத்தில் தேசிய மக்கள் சக்தி 19,308 வாக்குகளை பெற்றுக் கொண்டதுடன், ஐக்கிய தேசிய கட்சிக்கு 9,163 வாக்குகள் கிடைத்தன.

மொனராகலை மாவட்டத்தில் ஸ்ரீலங்கா பொதுஜன பெரமுன 2,08,193 வாக்குகளைப் பெற்று 5 ஆசனங்களை கைப்பற்றியுள்ளது. ஐக்கிய மக்கள் சக்தி 54,147 வாக்குகளை பெற்று 1 ஆசனங்களை தனதாக்கிக் கொண்டது. தேசிய மக்கள் சக்தி 11,429 வாக்குகளை பெற்றுக் கொண்டது.

**வடமத்திய மாகாணம் - 14 ஆசனங்கள்**

அநுராதபுரம் தேர்தல் மாவட்டத்தில் 3,44,458 வாக்குகளை பெற்று ஸ்ரீலங்கா பொதுஜன பெரமுன 7 ஆசனங்களையும், 1,19,788 வாக்குகளை பெற்றுக் கொண்ட ஐக்கிய மக்கள் சக்தி 2 ஆசனங்களை கைப்பற்றியது. தேசிய மக்கள் சக்தி 24,492 வாக்குகளையும் ஐக்கிய தேசிய கட்சி 8,254 வாக்குகளையும் கைப்பற்றியுள்ளது.

பொலனறுவை மாவட்டத்தில் ஸ்ரீலங்கா பொதுஜன பெரமுன 1,80,847 வாக்குகளை பெற்று 4 ஆசனங்களையும், ஐக்கிய மக்கள் சக்தி 47,781 வாக்குகளை பெற்று 1 ஆசனங்களை தனதாக்கிக் கொண்டது. தேசிய மக்கள் சக்தி 6,792 வாக்குகளை பெற்றுக் கொண்டதுடன், ஐக்கிய தேசிய கட்சி 6,525 வாக்குகளைப் பெற்றுக் கொண்டது.

**தென் மாகாணத்தில் - 23 ஆசனங்கள்**

அம்பாந்தோட்டை மாவட்டத்தில் 2,80,881 வாக்குகளைப் பெற்றுக் கொண்ட ஸ்ரீலங்கா பொதுஜன பெரமுன 6 ஆசனங்களை பெற்றது. ஐக்கிய மக்கள் சக்தி 51,758 வாக்குகளை பெற்று ஓர் ஆசனத்தை கைப்பற்றியதுடன், தேசிய மக்கள் சக்தி 31,362 வாக்குகளையும், ஐக்கிய தேசிய கட்சி 5,017 வாக்குகளை பெற்றுக் கொண்டது. ஐக்கிய மக்கள் சக்தி மற்றும் தேசிய மக்கள் சக்தி ஆகியன அம்பாந்தோட்டை தேர்தல் மாவட்டத்தில் ஆசனங்களை கைப்பற்றவில்லை.

மாத்தறை மாவட்டத்தில் 3,52,217 வாக்குகளைப் பெற்றுக் கொண்ட ஸ்ரீலங்கா பொதுஜன பெரமுன 6 ஆசனங்களை பெற்றது. ஐக்கிய மக்கள் சக்தி 72,740 வாக்குகளை பெற்று 1 ஆசனத்தை கைப்பற்றியதுடன், தேசிய மக்கள் சக்தி 37,136 வாக்குகளையும், ஐக்கிய தேசிய கட்சி 7,631 வாக்குகளை பெற்றுக் கொண்டது.

காலி மாவட்டத்தில் 4,30,334 வாக்குகளைப் பெற்றுக் கொண்ட ஸ்ரீலங்கா பொதுஜன பெரமுன 7 ஆசனங்களை பெற்றது. ஐக்கிய மக்கள் சக்தி 110,312 வாக்குகளை பெற்று 2 ஆசனத்தை கைப்பற்றியதுடன், தேசிய மக்கள் சக்தி 26,828 வாக்குகளையும், ஐக்கிய தேசிய கட்சி 17,461 வாக்குகளை பெற்றுக் கொண்டது.

**(தேர்தல் பற்றிய ஓர் பார்வை தொடரும்)**

**சமூகவியல் துறை,
கிழக்குப் பல்கலைக்கழகம்.**




**வரலாற்றுச் சிறப்பு மிக்க நல்லூர் கந்தசாமி கோவில்
வருடாந்த உற்சவத்தையொட்டி
'காலைக்கதிர்' நடாத்தும் பாடசாலை மாணவர்களுக்கான**

# மாபெரும் சைவ சமய அறிவுப் போட்டி - 2020

## போட்டி விதிகள்

1. இந்தப் போட்டி பாடசாலை மாணவர்களுக்கானதாகும். தரம் 6 முதல் தரம் 13 வரையான மாணவர்கள் மட்டுமே இந்தப் போட்டியில் பங்கு பற்ற முடியும்.
2. 03.08.2020 முதல் எதிர்வரும் 18.08.2020 வரை காலைக்கதிரில் தினமும் வெளியாகும் கேள்விகளுக்குச் சரியான விடைகளை இதே தாளில் எழுதி, கூப்பனிலுள்ள விபரங்களை நிரப்பி அனுப்புவதன் மூலம் போட்டியினுள் நுழையலாம்.
3. சரியான விடைகளை எழுதும் மாணவர்களில் இருந்து தினமும் குலுக்கல் முறை மூலம் அந்த நாளுக்குரிய வெற்றியாளர் தெரிவு செய்யப்படுவார். அத்துடன் முழு நாள்களிலும் சரியான விடைகளை எழுதி அனுப்பியவர்களில் குலுக்கல் மூலம் தெரிவு செய்யப்படும் முதல் மூன்று பேருக்கும் பணப் பரிசில்கள் உண்டு

**பரிசு விபரம் :**

**முழுப் போட்டிக்குமான முதலாம் இடம் - ரூபா 15,000.00**
**இரண்டாம் இடம் - ரூபா 10,000.00**
**மூன்றாம் இடம் - ரூபா 5,000.00**
**தினசரி வெற்றியாளர்கள் ஒவ்வொருவருக்கும் தலா - ரூபா 1,000.00**

4. ஒருவர் எத்தனை கூப்பன்களையும் அனுப்பலாம்.
5. பரிசுக்குரியவர்கள் எதிர்வரும் 22.08.2020 அன்று காலைக்கதிர் பத்திரிகை மூலம் அறிவிக்கப்படுவார்கள்.
6. நடுவர்களின் தீர்ப்பே இறுதியானதாகும்.

**1. விநாயகர் அகவலை அருளியவர் யார்?**

.....................................................................................

**2. ஆடி அமாவாசை திதியில் தீர்த்தத் திருவிழா இடம்பெறும் கிழக்கிலங்கையின் கீர்த்திமிக்க விநாயகர் ஆலயம் எது?**

.....................................................................................

**3. குறுமுனி எனப் போற்றப்படுபவர் யார்?**

.....................................................................................

**4. கந்தபுராணப் போரில், யானை முகங்கொண்ட - சூரனின் சகோதரனின் பெயர் என்ன?**

.....................................................................................

**5. கந்த புராணத்தில் சூரர்களின் நகரம் என்ன பெயர் கொண்டு அழைக்கப்பட்டது?**

.....................................................................................

**சரியான பதில்கள், கூப்பன்களுடன் இணைக்கப்பட்டு தபால் மூலமாகவோ, நேரடியாகவோ கிடைக்கக் கூடியவாறு எதிர்வரும் 20.08.2020 இற்கு முன்னர் பின்வரும் முகவரிக்கு அனுப்பி வைக்கப்பட வேண்டும்.**

**காலைக்கதிர் - பசுமை ஊடக இல்லம்
30, கல்லூரி வீதி,
யாழ்ப்பாணம்**

07

பங்குபற்றுபவர்களின் விவரங்கள்:-

1. முழுப் பெயர் :..........................................................................
2. பிறந்த திகதி :..........................................................................
3. கல்வி கற்கும் தரம் :..................................................................
4. பாடசாலை :..............................................................................

..........................................
கையொப்பம்

# எந்தவொரு சர்வதேச நாட்டுக்கும் அடிபணிந்து செயற்பட மாட்டோம்

## மிகவும் உறுதியாகக் கூறுகின்றார் மொட்டின் தவிசாளர் ஜி.எல்.பீரிஸ்

கொழும்பு, ஓக.09

எந்தவொரு சர்வதேச நாட்டுக்கும் அமைப்புக்கும் நாம் அடிபணிந்து செயற்படமாட்டோம் என்று ஶ்ரீலங்கா பொதுஜன பெரமுனவின் தவிசாளர் பேராசிரியர் ஜீ.எல்.பீரிஸ் தெரிவித்தார்.

ஶ்ரீலங்கா பொதுஜன பெரமுனவின் தலைமையகத்தில் நேற்று நடைபெற்ற ஊடகவியலாளர் சந்திப்பில் கலந்து கொண்டு உரையாற்றும் போதே அவர் இவ்வாறு கூறினார்.

ஶ்ரீலங்கா பொதுஜன பெரமுனவுக்கு மகத்தான வெற்றியை நாட்டு மக்கள் வழங்கியுள்ளனர். ஜனாதிபதி கோட்டாபய ராஜபக்ஷவின் தலைமைத்துவம் பிரதமர் மஹிந்த ராஜபக்ஷ, பஸில் ராஜபக்ஷ உட்பட எமது கட்சியினரே இதற்கு காரணம். நாட்டில் உள்ள 22 தேர்தல் மாவட்டங்களில் 19 மாவட்டங்களைக் கைப்பற்றியுள்ளோம்.

நாம் பெற்றுக்கொண்ட வாக்குகளின் அரைவாசி வாக்குகளைக் கூட எதிர்க் கட்சியால் பெற்றுக்கொள்ள முடியாது போயுள்ளது. ஐ.தே.க வரலாறு காணாத தோல்வியை சந்தித்துள்ளது. எம்மால் தான் நாட்டின் பொருளாதாரத்தை முகாமைத்துவம் செய்ய முடியுமென ரணில் கூறியிருந்தார். ஆனால், ஐ.தே.கவுக்கு ஓர் ஆசனத்தைக்கூட வழங்காது மக்கள் அடியோடு நிராகரித்துவிட்டனர்.

கடந்த ஜனாதிபதித் தேர்தலில் ஜனாதிபதி கோட்டாபய ராஜபக்ஷ முன்வைத்த வேலைத்திட்டத்தை நடைமுறைப்படுத்த மக்கள் வழங்கிய பலமிக்க ஆணையாகவும் இந்த வெற்றி அமைந்துள்ளது. எதிர்காலஎதிர்பார்ப்புகளைவிட கொரோனா ஒழிப்பு நடவடிக்கை முதல் கடந்த எட்டு மாதங்களில் ஜனாதிபதி தாம் யாரென செயலில் நிரூபித்துக் காட்டியுள்ளமையினாலேயே மக்கள் அவர் மீது வைத்துள்ள அசைக்க முடியாத நம்பிக்கையை தேர்தல் ஊடாக வெளிப்படுத்தியுள்ளனர்.



அதேபோன்று இந்த வெற்றியை நாம் பாரிய சவாலாகவும் எடுத்துக்கொள்கிறோம். காரணம், நாடாளுமன்றத்தில் ஒரு வலுவான எதிர்க்கட்சியொன்று இல்லாது போயுள்ளது. பிரதிநிதித்துவ அரசியலில் பலமான எதிர்க்கட்சியொன்று இருந்தால்தான் அரசாங்கத்தின் தவறுகளைச் சுட்டிக்காட்ட முடியும். அதனால் நாம் நாடாளுமன்றக் குழுக்களை வலுப்படுத்த எண்ணியுள்ளோம். அதில் எதிர்க் கட்சி உறுப்பினர்களுக்கு அதிக வாய்ப்புகளை வழங்குவதன் மூலம் ஓரளவு அந்த குறைபாட்டை நிவர்த்தி செய்ய முடியும். எமக்கு மூன்றில் இரண்டு பெரும்பான்மையுடன் அசைக்க முடியாத ஆணையை மக்கள் வழங்கியுள்ளமையால் நாம் நினைத்ததை செய்ய மாட்டோம். அவ்வாறான அரசாங்கமல்ல எமது அரசாங்கம். மக்களின் கருத்துக்கும் ஏனையவர்களின் கருத்துக்களுக்கும் செவிமெடுத்துத்தான் செயற்படுவோம்.

கோட்டாபய ராஜபக்ஷ ஜனாதிபதியாகத் தெரிவான சந்தர்ப்பத்தில் அவரின் வேலைத்திட்டத்தை முன்னெடுத்துச் செல்வதற்கான நாடாளுமன்றமொன்று இருக்கவில்லை. 19ஆவது திருத்தச் சட்டத்தால் இந்த நிலைமை ஏற்பட்டது. 19ஆவது திருத்தச்சட்டம் இல்லாவிட்டால் கடந்த டிசம்பர் மாதம் பொதுத் தேர்தல் நடைபெற்றிருக்கும்.

19ஆவது திருத்தச் சட்டத்தில் பாரிய குறைபாடுகளுள்ளன. சுயாதீனக் குழுக்களின் செயற்பாடுகளிலும் பாரிய சிக்கல் நிலைமைகள் காணப்படுகின்றன. ஆகவே, 19ஆவது திருத்தச்சட்டத்தில் காணப்படும் சிக்கல்களை திருத்தியமைக்க நடவடிக்கையெடுப்போம்.

மூன்றில் இரண்டு பெரும்பான்மையுடன் போதிய ஆணையை மக்கள் வழங்கியுள்ளமையால் தேசிய அரசாங்கமொன்றை அமைப்பதற்கான தேவை எமக்கில்லை. தேசிய அரசாங்கமொன்று அமைக்கப்படாது. ஈ.பி.டி.பி., சுதந்திரக் கட்சி, தமிழ் மக்கள் விடுதலைப் புலிகள் கட்சி உட்பட எமது கூட்டணியின் கீழ் போட்டியிட்ட பல கட்சிகள் ஆசனங்களைப் பெற்றுள்ளன. அவை அனைத்தையும் சேர்க்கும்போது மூன்றில் இரண்டு பெரும்பான்மையைவிட அதிகமான ஆணை எமக்குள்ளது.

எந்தவொரு சர்வதேச நாட்டுக்கும் அமைப்புக்கும் நாம் அடிபணிந்து செயற்பட மாட்டோம். ஜனாதிபதி தமது பதவியேற்பு விழாவில் இதனை தெளிவாக வலியுறுத்தியுள்ளார்.

## அனைத்துப் பாடசாலைகளும் நாளை முதல் முழுமையாக

நாடளாவியரீதியில் உள்ள அனைத்து பாடசாலைகளையும் நாளை முதல் முழுமையாக ஆரம்பிக்கத் தீர்மானித்துள்ளதாக கல்வி அமைச்சின் பிரதி செயலாளர் ரஞ்சித் சந்திரசேகர தெரிவித்துள்ளார்.

நாடாளுமன்ற பொதுத் தேர்தல் நிறைவடைந்துள்ள நிலையில் பாடசாலைகளை ஆரம்பிப்பது தொடர்பில் செய்தியாளர்களுக்குக் கருத்து தெரிவிக்கும் போதே அவர் இதனை தெரிவித்துள்ளார். தொடர்ந்தும் பேசிய அவர்–

200 இற்கும் குறைவான மாணவர்களைக் கொண்ட பாடசாலைகள் தவிர்ந்த ஏனைய பாடசாலைகளை கட்டம் கட்டமாக ஆரம்பிக்க தீர்மானிக்கப்பட்டுள்ளது.

பாடசாலைகளில் ஒரு மீற்றர் இடைவெளியை பேண முடியுமானால் அனைத்து மாணவர்களையும் அழைக்க முடியும். 200 ஐ விட அதிக மாணவர்கள் காணப்படுகின்ற பாடசாலைகளில் கட்டம் கட்டமாக மாணவர்களை வரவழைக்க தீர்மானிக்கப்பட்டுள்ளது.

அதற்கமைய 200 ஐ விட அதிக மாணவர்களைக் கொண்டு பாடசாலைகளில்,

திங்கட்கிழமை – 1, 2 ஆம் வகுப்புக்கள்.

செவ்வாய்கிழமை – 2 , 5 ஆம் வகுப்புக்கள்.

புதன்கிழமை – 3 , 5 ஆம் வகுப்புக்கள்.

வியாழக்கிழமை , வெள்ளிக்கிழமை – 4 , 5 ஆம் வகுப்புக்கள்.

– என்ற ரீதியில் ஆரம்பமாகவுள்ளன.

**ஏனைய வகுப்புக்கள்,**

திங்கட்கிழமை – 6 , 10 , 11 , 12 மற்றும் 13 ஆம் வகுப்புக்கள்.

செவ்வாய்கிழமை – 7 , 10 , 11 , 12 மற்றும் 13 ஆம் வகுப்புக்கள்.

புதன்கிழமை – 8 , 10 , 11 , 12 மற்றும் 13 ஆம் வகுப்புக்கள்.

வியாழக்கிழமை , வெள்ளிக்கிழமை – 9 , 10 , 11 , 12 மற்றும் 13 ஆம் வகுப்புக்கள்.

– என்ற ரீதியில் ஆரம்பமாகவுள்ளன.

அண்ணா விரைவுப் பொதிகள் சேவை

5Kg/11Kgக்கு மேல் 1 கிலோவுக்கான கட்டணம்

பிரான்ஸ் - ரூ.1500/ரூ.1300
ஜேர்மனி - ரூ.1500/ரூ.1300
டென்மார்க் - ரூ.1500/ரூ.1300
கொலண்ட் - ரூ.1500/ரூ.1300
பெல்ஜியம் - ரூ.1500/ரூ.1300
இத்தாலி - ரூ.1500/ரூ.1300
லண்டன் - ரூ.1500/ரூ.1300

இச் சேவையில் மேலதிகமாக எவ்வித கட்டணங்களும் வெளிநாட்டில் அறவிடப்படமாட்டாது.
5 - 8 வேலை நாள்கள்

எம்முடன் இணைந்து பொதிகள் சேவை தொடங்குவதாயின் தொடர்புகொள்ளவும்.

லண்டன் - 1000/=, பிரான்ஸ் - ஜேர்மனி - டென்மார்க் - கொலண்ட் -1200/= கனடா - அமெரிக்கா - 1500/= சுவிஸ் - 1400/= (வரி உள்ளடக்கப்படவில்லை)

076 122 1566 | 070 3305500 | 075 3305500 | 076 5522999 | 076 1221566

# தமிழ்க் கட்சிகளை ஒன்றிணையுமாறு அழைக்கிறது உலகத்தமிழர் பேரவை

லண்டன், ஓக. 09

இலங்கையின் நாடாளுமன்றத்துக்கு தெரிவாகியுள்ள தமிழ்க் கட்சிகள், தமிழ் மக்களின் நலன்களுக்காக நாடாளுமன்றத்தில் ஒன்றிணைந்து செயற்பட வேண்டும் என்று அழைப்பு விடுக்கப்பட்டுள்ளது.

பிரித்தானியாவைத் தளமாக கொண்ட உலகத் தமிழர் பேரவை இந்த அழைப்பை விடுத்துள்ளது.

இது தொடர்பில் வெளியிடப்பட்டுள்ள செய்திக் குறிப்பில் –

புதிய பிரதமர் மஹிந்த ராஜபக்ஷ, சிங்கள பௌத்த மக்கள் மத்தியில் மிகுந்த புகழ் பெற்ற அனுபவம் வாய்ந்த அரசியல்வாதி ஆவார்.

இந்த நிலையில் தமிழ் மற்றும் பிற சிறுபான்மைச் சமூகங்களின் அபிலாஷைகளை நிவர்த்தி செய்வது உட்பட்ட பிரச்சினைகளுக்கு அவர் தீர்வை காண வேண்டும்.

தற்போது அவரது அரசின் அதிகாரம் பெரும்பான்மை உச்சத்தில் இருக்கும்போது, 'அனைத்து குடிமக்களுக்கும் பயன்தரு நடவடிக்கைகளை மேற்கொள்ள' இது அவருக்கு பொன்னான வாய்ப்பாக உள்ளது.

யுத்தம் முடிவடைந்து பதினொரு ஆண்டுகளுக்குப் பிறகு, தமிழ் அரசியல் தளம் மாறி வருகிறது. தமிழ்த் தேசிய கூட்டமைப்பின் நாடாளுமன்ற பிரதிநிதித்துவம் 2015 இல் 16 ஆக இருந்தபோதும் தற்போது 10 ஆகக் குறைந்துள்ளது.

எனினும் வடக்கு மற்றும் கிழக்கு மாகாணங்கள் முழுவதும் தமிழ் தேசிய நலன்களைப் பிரதிநிதித்துவப்படுத்தும் பிரதான அரசியல் கட்சியாக அது இருந்து வருகிறது. தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் அதிகாரம் இரண்டு முனைகளில் தெளிவாக அழிந்துவிட்டது.

தென்னிலங்கை கட்சிகள் ஆதிக்கம் செலுத்தும் அரசு அதிகார அமைப்பில் அந்தக் கட்சி முழுமையாக பங்கேற்றபோதிலும், வாக்காளர்களின் எதிர்பார்ப்பை வழங்கவில்லை.

இந்த நிலையில் தமிழ் மக்களின் அரசியல், பொருளாதார, கல்வி மற்றும் கலாசார அபிலாஷைகளை கொள்கை ரீதியாகவும் நடைமுறை ரீதியாகவும் விரிவாகக் கவனிக்க வேண்டிய நீண்ட கால பார்வை மற்றும் செயல் திட்டம் நாடாளுமன்றத்தில் அங்கம் வகிக்கும் தமிழ்க்கட்சிகளுக்கு அவசியம் – என்றுள்ளது.

## இம்முறை நாடாளுமன்றுக்கு 76 பேர் புதிய முகங்களாம்!

கொழும்பு, ஓக.09

பொதுத்தேர்தலில் போட்டியிட்டு வெற்றிபெற்ற 196 உறுப்பினர்களில் 64 பேர் முதன்முறையாக நாடாளுமன்றம் செல்லவுள்ளனர். அத்துடன் 12 பேருக்கு தேசியப்பட்டியல் ஊடாக வாய்ப்பு வழங்கப்பட்டுள்ளது.

இதன்படி அமையவுள்ள 9 ஆவது நாடாளுமன்றத்தில் அங்கம் வகிக்கும் 225 பேரில் 76 பேர் புதுமுக உறுப்பினர்களாவர்.

அதேவேளை, நாடாளுமன்றத்துக்கு இம்முறை தெரிவானவர்களில் இளம் வயதுடைய அரசியல்வாதியாக இ.தொ.காவின் பொதுச்செயலாளர் ஜீவன் தொண்டமான் விளங்குகின்றார்.

## இலங்கையர்களை மீளழைக்கும் நடவடிக்கை திரும்பவும் ஆரம்பம்

வெளிநாட்டில் உள்ள இலங்கையர்களை மீண்டும் நாட்டுக்கு அழைத்துவரும் செயற்பாடுகள் இன்று முதல் மீண்டும் முன்னெடுக்கப்படுமென வெளியுறவு தொடர்பான ஜனாதிபதியின் மேலதிக செயலாளர் ஓய்வு பெற்ற அட்மிரால் ஜயநாத் கொலம்பகே தெரிவித்துள்ளார்.

கொரோனா அச்சம் காரணமாக தற்காலிகமாக இடைநிறுத்தப்பட்டிருந்த இச்செயற்பாடுகள் மீள முன்னெடுக்கப்படவுள்ளன.

முதல் கட்டமாக இந்தியா, டோஹா, கட்டார் மற்றும் மாலைதீவில் உள்ள இலங்கையர்கள் இன்றைய தினம் அழைத்து வரப்படவுள்ளனர்.

இதன்படி, இந்தியாவில் இருந்து 185 பேரும், மாலைதீவில் 187 பேரும் மற்றும் டோஹா, கட்டாரில் இருந்து 17 இலங்கையர்களும் இலங்கை வருகை தரவுள்ளமை குறிப்பிடத்தக்கது.

இந்நாளிதழ் யாழ்ப்பாணம் இல.30 இந்துக் கல்லூரி வீதியிலுள்ள Green Media House Pvt Ltd நிறுவனத்தின் பணிமனையில் தயாராகி 09.08.2020 இல் வெளியிடப்பெற்றது.